மெய்யறம்

(அரும்பதவுரையுடன்).

வ. உ. சிதம்பரம்பிள்ளை
(நூலாசிரியன்).

மூன்றும் பதிப்பு.

ஷண்முகவிலாசம் பிரஸ்,
அம்பாசமுத்திரம்.
1930.

இந்நூலின் முதல் இரண்டு பதிப்புப் பிரதிகள் செலவாகிவிட்டமையாலும், இதனைப் பலர் வேண்டினமையாலும், இதனை மூன்றும் முறை அச்சிற் பதிப்பிக்கத் துணிந்தேன்

இந்நூலை மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுத்துள்ளேன். அவ்வாறு யான் பகுத்ததற்குக் காரணம் மானுடப்பிறப்பை அடைந்த ஒவ்வொருவரும் முறையே மாணவராய், இல்வாழ்வாராய், அரசராய், அந்தணராய் மெய்ந்நிலையை அடையலாமென்ற எனது கோட்பாடும், அவர்கள் அவ்வாறு அந்நிலைகளை அடையவேண்டுமென்ற எனது விருப்பமுமே.

" பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான் " என்றபடி பிறப்பால் மனிதரெல்லாரும் ஒரே தன்மையரென்பதும், ஒவ்வொருவரும் தாம் தாம் கைக்கொள்ளும் ஒழுக்கங்களுக்குத் தக்கவாறு உயர்வையும் தாழ்வையும் அடைவரென்பதும், அறிவுடையோர் பலரும் கொண்ட கொள்கை.

ஆதலால், இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு உயர்ந்ததாயுள்ள நிலைக்குரிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு அவ்வுயர்ந்த நிலையை அடைந்து அவ்வாறே ஒவ்வோர் உயர்ந்த நிலையையும் அடைந்து மேம்படுவார்களாக.

கோவிற்பட்டி.
பிரமோதூதஞு ஆனிமீ 9உ } வ. உ. சிதம்பரம்பிள்ளை.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	5	மதுசேய	மதுசெய
,,	9	அன்னைதந	அன்னைதந்
4	9	பொல்லா	பெல்லா
5	14	தகுவது	தருவது
7	21	சய்க	செய்க
12	4	அறியர்	அறியா
13	7	எழுத்தரி	எழுத்தறி
,,	21	புலிகடல்	புவிகடல்
18		மெய்யறம் என்னும் தலைப்பெயர்க்கும்அதிகாரப்பெயர்க்கும் மத்தியில் இல்வாழ்வியல் என்று ஒரு வரி சேர்த்துக் கொள்க.	
19	23	உண்பண	உண்பன
21	20	அவனேடு	அவனெடு
23	10	யித்தன்	பித்தன்
29	2	பேனல்	பேணல்
30	14	னுருககம்	னுருக்கம்
31	17	யொருவருந	யொருவருந்
32	6	பிறருக்	பிறருக்
33	13	சுற்றல்	சுற்றம்
35	19	முருப்ப	முடிப்ப
36	12	ஒற்றில்	ஒற்றிற்
,,	18	அழியாயப்	அழியாப்
,,	19	பொருளில்லை	பொருளிலை
37	10	காமமும	காமமும்
,,	12	அரசுவிக	அரசுவிக்
38	9	நன்பருள்	நண்பருள்
40	11	யளித்திட	யழித்திட
,,	17	மாமுதற்	மாமுதற்
42	5	கமைந்தலோ	கமைத்தலோ
,,	6	லமைந்திடல்	லமைத்திடல்
46	5	காட்டுளார்	காட்டுளார்க்
49	8	செய்யும்	செயும்
50	14	வழக்குக	வழக்கு
52	15	தறியவு	தரியவு
53	19	அழிவென	அழிவன
55	4	யணியவு	பணியவு
59	19	மனித	மடித
61	9	கொலைமுக	கொலைமுத
65	3	உயரியல்	உயிரியல்
,,	6	யுதவல்	வுதவல்

மெய்யறம்.

சமர்ப்பணம்.

உலக மனைத்தினு மொளிமிக வுடைய
நாவலந் தீவெனு மாவல மகளின்
முகமென விளங்கும் பரதகண் டத்தின்
செவ்விய நுதலாஞ் செந்தமிழ் நிலத்தின்
திலக மாமென விலகுபுன னாட்டின்
செஞ்சொலார் பெருகுந் தஞ்சைமா நகரில்
தாளாண்மை செய்து வேளாண்மை புரியும்
கார்காத் தாருட் சீர்மிக வாய்ந்த
நற்குடிப் பிறந்து பொற்புற வளர்ந்து
தமிழுமாங் கிலமுஞ் சால்புறக் கற்று
நடுவு புரிந்து நற்புகழ் பெருக்கி
இராசாங் கத்தார் இராவ்பக தூரெனும்
பட்டம் வழங்கப் பண்புடன் பெற்றுத்
தமிழினை வளர்த்துத் தமிழ்நா டளித்த
வலனுர் சீனி வாச பிள்ளை
யவர்க ளீகை யாதிய நற்செயல்
கண்டுள மகிழ்ந்தவர் கட்குத்
தகவொடு மெய்யறம் சமர்ப்பித் தேனே.

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

மெய்யறம்

இயல் அதிகார அகராதி.

அதிகார அகராதி.

அதிகார அகராதி.

மெய்யறம்.

சிறப்புப் பாயிரம்

மெய்யற மியற்றினேன் வையமோர் சிதம்பரம். க
வள்ளுவ ரெல்லையிம் மறைக்கு மெல்லையாம். உ
மடியருங் கேட்கவோ ரடியால் யாத்தனன். ௩
றுதலிய தறவழி முதனிலை யடைதல். ௪
அறம்பொரு ளின்பம்வீ டடைதல் பயனே. ௫
விரோதி கிருதுவில் விளம்பப் பெற்றது. ௬
கண்ணனூ ரான்மனை யெண்ணியாத் திடுகளம். ௭
ஆன்றமா தேவ னகமாங் கேற்றிடம். ௮
ஏனைப்புங் கற்குமா றியற்றப் பட்டது. ௯
மெய்யற மென்றும் வையகத் துலாவுக. ௰

சகஜாநந்தன்.

மெய்யறம்.

பாயிரம்.

மெய்ப்பொரு ளருளான் மெய்யற மாகுக. ௧
வள்ளுவர் மறையின் வழிநூன் மெய்யறம். ௨
அறநூல் கற்றுரைத் தாற்றுவோ னுவல்வோன். ௩
மேற்கோ ளாதியால் விளக்குத னுவறிறன். ௪
மெய்யோ பொருளோ வேண்டுவோன் கொள்வோன். ௫
கொளுந்திறன் கசடறக் கொண்டுநன் கொழுகல். ௬
மெய்யறம் பொருளொடு மெய்யருள் சேர்க்கும். ௭
பொய்யறம் புணர்ந்ததாற் புரிந்தனன் மெய்யறம். ௮
பொய்யற மொழிந்திவண் மெய்யற நிலவுக. ௯
மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொரு ளாகுக. ௰

மெய்யறம்.

மாணவ ரியல்.

முதல் அதிகாரம்.—மாணவர் கடமை.

மாண்பெற முயல்பவர் மாணவ ராவர். க
ஆணும் பெண்ணு மதுசெய வுரியர். உ
இளமைப் பருவ மியைந்த ததற்கே. ௩
மற்றைய பருவமும் வரைநிலை யிலவே. ௪
அவர்கடன் விதியிய லறிந்துநன் குற்றல். ௫
அன்னைதந் தைபரை யாதியைத் தொழுதல். ௬
தீயினம் விலக்கி நல்லினஞ் சேர்தல். எ
தக்கவா சிரியாற் றன்னிய லறிதல். அ
ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல். ௯
இறைவ னிலையினை யெய்திட முயறல். ௰

உ-ம் அதி.—விதியியல் அறிதல்.

வினையின் விளைவே விதியென வந்தறும். கக
விதிசெய் கர்த்தா வினைசெய் யுயிரே. கஉ
மெய்ப்பொருள் வினையை விளைத்துயிர்க் கீயும். க௩
தீவினை விளைவிற் சேருவ துன்பம். க௪
நல்வினை விளைவி னணுகுவ வின்பம். க௫
தீவிதி வாவைச் செப்பு மடன்மடி. க௬
நல்விதி வரவை நவிலுமறி வூக்கம். கஎ
விதியை மாற்றிட வினையை மாற்றுக. கஅ
தீவிதி வேண்டிற் றீவினை புரிக. க௯
நல்விதி வேண்டி னல்வினை புரிக. உ௦

௩-ம் அதி.— தாய்தந்தையரைத் தொழுதல்.

தாயுந் தந்தையுந் தம்முதற் றெய்வம். ௨௧
அவரிற் பெரியர் யாருமிங் கிலரே. ௨௨
அவரடி முப்பொழு தநுதினந் தொழுக. ௨௩
அவர்பணி யெல்லா மன்பொடு செய்க. ௨௪
அவருரை யெல்லா மறிந்துளங் கொள்க ௨௫
அவர்பொருள் செய்தற் காந்துணை புரிக. ௨௬
அவர்நட் பெல்லா மவர்போற் கொள்ளுக. ௨௭
அவர்பகை யெல்லா மவர்போற் றள்ளுக. ௨௮
அவர்பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக. ௨௯
இல்வாழ் வரசிற் கியைந்தவ ராகுக. ௩௰

௪-ம் அதி.—மெய்யைத் தொழுதல்.

மெய்யுல கெல்லாஞ் செய்முதற் கடவுள். ௩௧
உலகப் பொருட்கெலா முயிரென நிற்பது. ௩௨
அறிவா யெங்கணுஞ் செறிவா யமைந்தது. ௩௩
பகுத்தறி யுயிர்வினைப் பயனதற் களிப்பது. ௩௪
உலகந் தனதரு ணலனுற வாள்வது. ௩௫
தொழுமுறை யதனைமுப் பொழுது முள்ளல். ௩௬
உள்ளியாங் குறங்கி யுள்ளியாங் கெழுதல். ௩௭
எம்மதக் கடவுளுந் தம்ம தெனக்கொளல். ௩௮
உலகி லதனடு வோர்ந்து நிற்றல். ௩௯
அந்தண ராகி யதனில் யடைதல். ௪௰

௫-ம் அதி.—தீயினம் விலக்கல்.

தீதெலாந் தருவது தீயினத் தொடர்பே. ௪௧
தீயவர் நல்லுயிர் சிதைக்குங் கொடியர். ௪௨
பிறர்பொருள் வவ்வும் பேதை மாக்கள். ௪௩
துணைவரல் லாரை யணையுமா வினத்தர். ௪௪
அறிவினை மயக்குவ வருந்து மூடர். ௪௫
புரைவளர் பொய்ம்மை புகலுந் தீயர். ௪௬
அறனே பொருளோ வழிக்குங் கயவர். ௪௭
பசுவின் செயலைப் பதியின தென்போர். ௪௮
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். ௪௯
தீயின மெல்லா நோயென விலக்குக. ௫0

௬-ம் அதி.—நல்லினஞ் சேர்தல்.

நன்றெலாந் தருவது நல்லினத் தொடர்பே. ௫௧
நல்லவர் மெய்ந்நிலை நண்ணி நிற்போர். ௫௨
அகத்துற வுற்றுமெய் யறிந்து நிற்போர். ௫௩
தவமு மொழுக்கமுந் தாங்கி நிற்போர். ௫௪
நன்னினைப் புரைசெயன் மன்னி நிற்போர். ௫௫
உலகிய லெல்லா முணர்ந்து நிற்போர். ௫௬
அறனே பொருளோ வாக்கி நிற்போர். ௫௭
பசுவினைப் பயன்பதி பயக்கு மென்போர். ௫௮
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். ௫௯
தினமு நல்லினந் தெரிந்துசேர்ந் திடுக. ௬0

எ-ம் அதி.—ஆசிரியரை யடைதல்.

அறிவினைத் தருபவ ராமா சிரியர். சுக
இருபா லாருந் தருவதற் குரியர். சுஉ
அறிவு வகையா னாசிரி யர்பலர். சுங
எவர்க்கு மொழுக்க மின்றியமை யாதது. சுச
அவர்கடன் மாணவ ரறிதிற னறிதல். சுரு
நல்வினை விரும்பு நல்லவர்க் கோடல். சுசு
மாணவர் தமைத்தம் மகாரெனப் பேணல். சுஎ
அறிந்தவை யெல்லாஞ் செறிந்திடச் சொல்லல். சுஅ
சொல்லிய செய்பவும் வல்லுந ராக்குதல். சுகூ
அறிந்தா சிரியரை யடைந்தெலா மறிக. எ0

அ-ம் அதி.—தன்னை யறிதல்.

தன்னை யறித றலைப்படுங் கல்வி. எக
மனிதரி னுடம்பு மனமான் மாவுள. எஉ
தோன்முதற் பலவின் றொகுதிகா னுடம்பு. எங
உடம்பெலா நிற்கு முயாறி வுரன்மனம். எச
உடம்பு மனமுமா ளுபாறி வான்மா. எரு
ஆன்மா மனமுட ரூன்றன் வலிதனு. எசு
மெய்ம்முத லியமனம் வெளிச்செலும் வாயில். எஎ
உடன்மனத் தின்பி னேடு மியலது. எஅ
மனமற வறநெறி மருவு மியலது. எகூ
ஆன்மா மனத்தை யறநெறி யுய்ப்பது. அ0

கூ-ம் அதி.—மனத்தை யாளுதல்.

மனமுத் தொழில்செயு மாபெருஞ் சத்தி. அக
நினைக்குந் தொழிலை நிதமுஞ் செய்வது அஉ
அறனு மறனு மறிதிற னிலாதது. அந
அதனெறி விடுப்பி னழிவுடன் கொணரும். அச
அதனெறி விடாது தாளுத றன்கடன். அரு
தானதிற் பிரிந்து சந்தத நிற்க. அசு
எதையது நினைத்ததோ வதையுடன் காண்க. அஎ
மறமெனில் விலக்குக வறமெனிற் செலுத்துக. அஅ
பயனிலவெண்ணிற் பயனதிற் றிருப்புக. அகூ
ஒன்றெணும் பொழுதுமற் றொன்றெண விடற்க. கூ0

0-ம் அதி.—உடம்பை வளர்த்தல்.

உடம்பெலாஞ் செய்யு மொப்பிலாக் கருவி. கூக
உடம்பை வளர்த்தலஃ தாமுறச் செய்தல். கூஉ
உடம்புநல் லூரமுறி னுலகெலா மெய்தும். கூந
உரனிலா வுடம்பு வானிலா மங்கை. கூச
உளந்தொழில் செயற்கு முடலூரம் வேண்டும். கூரு
வளியன னீரதி லளவி னுறச்செயல். கூசு
மாறுபா டிலாவூண் மறுத்துமுப் பொழுதுணல். கூஎ
சிலம்பமெய்ப் பயிற்சிக டினந்தொறுஞ் செய்க. கூஅ
பிணியுறி னுடன்பல தீர்த்தான் மருந்துணல். கூகூ
நினைந்த படியுடல் வளைந்திட வளர்க்க. க00

கரு-ம் அதி.—இரவு விலக்கல்.

இரவென் பதுபிறர் தரவொன் றேற்றல். கசக
இரவினிற் ருழ்ந்ததொன் றிலெயென மொழிப. கசஉ
இரவினிற் களவு மேற்றமா மென்ப. கசங
இரந்திடப் படைத்தவன் பரந்தழி கென்ப. கசச
இரந்துயிர் வாழ்தலி னிறத்தனன் றென்ப. கசரு
அவருரை யெல்லா மழியா வுண்மை. கசசு
இரந்துயிர் வாழ்தலிங் கிழிவினு ளிழிவே. கசஎ
தமக்குவாழ் வாரதிற் சாதலு நன்றும். கசஅ
பிறர்க்குவாழ் வாரதாற் பிழைத்தலு நன்றும். கசகூ
அவரு மதைவிடி னரும்பெருஞ் சிறப்பாம். கரு௦

கசு-ம் அதி.—மயக்குவ விலக்கல்.

மயக்குவ வறிவினை மயக்கும் பொருள்கள். கருக
அவைகள் கஞ்சா வபின்முத லாயின. கருஉ
அறிவுதம் முயிரே யாதியே யுலகே. கருங
அறிவினை மயக்குத லவற்றை யழித்தலே. கருச
அறிவினை மயக்குவா ருருமறம் புரிவர். கருரு
மயக்குவ சிலபிணி மாய்க்குமென் றுண்பர். கருசு
மயக்காத வுண்டவை மாய்த்தலே யுத்தமம். கருஎ
மயக்குவ வலியினை வழங்குமென் றுண்பர். கருஅ
வலியினை வழங்கல்போல் வலியெலாந் தொலைக்கும். கருகூ
ஆதலான் மயக்குவ வற்பமுங் கொண்டிடேல். கசு௦

கஎ-ம் அதி.—போய்ம்மை விலக்கல்

நிகழா ததனை நிகழ்த்துதல் பொய்ம்மை. கசுக
நிகழ்வதை யங்ஙன நிகழ்த்துதல் வாய்மை. கசுஉ
தீமையைத் தருமெனின் வாய்மையும் பொய்ம்மையாம் கசுங
புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம். கசுச
வாய்மையைத் தருவதே வாயென வறிக. கசுரு
மற்றவை யெலாம்வெறும் வாயிலென் றறிக. கசுசு
வாய்மை யகத்தது தூய்மையை வளர்க்கும். கசுஎ
பொய்ம்மை யகத்தது புரையினை வளர்க்கும். கசுஅ
பொய்ம்மையை யாள்பவர் புன்னர காழ்வர் கசுகூ
பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர். கஎ௦

கஅ-ம் அதி.—புறஞ் சோல்லல் விலக்கல்.

புறஞ்சொலல் பிறரைப் புறத்திழித் துரைத்தல். கஎக
அறங்கொலு மறத்திற் புறஞ்சொலல் கொடிது. கஎஉ
புறஞ்சொலல் பொய்முதற் புரையெலாம் வளர்க்கும். கஎங
புறஞ்சொலல் புறனெலாம் பொருபகை யாக்கும். கஎச
புன்மகார் செயல்களுட் புறஞ்சொல லொன்று. கஎரு
புறஞ்சொலு நாவின ரறஞ்சொலல் வஞ்சம். கஎசு
புறஞ்சொலு நாவினர்க் கறஞ்சொலன் மடமை. கஎஎ
புறஞ்சொலல் கேட்டலும் புன்மையென் றறிக. கஎஅ
புறஞ்சொலி வாழ்தலிற் பொன்றனன் றென்ப. கஎகூ
ஆதலாற் புறஞ்சொல லடியொடு விடுக. கஅ௦

௧௯-ம் அதி.—பயனில் சொல் விலக்கல்.

பயனில்சொல் யார்க்கும் பயன்றராச் சொல்லே. ௧௮௧
அறியர் மையினின் றச்சொல் பிறக்கும். ௧௮௨
அறியா மையினை யச்சொல் வளர்க்கும். ௧௮௩
அறிவினர் நட்பெலா மச்சொல் குறைக்கும். ௧௮௪
அறிவிலார் நட்பினை யச்சொல் பெருக்கும். ௧௮௫
பயனுள சொல்லினைச் சொலவிடா தச்சொல். ௧௮௬
பயனுள செயலினைச் செயவிடா தச்சொல். ௧௮௭
பயனில சொல்லுவர் நயனுரு ரென்றும். ௧௮௮
பயனில சொல்பவர் பதடியென் றறைப. ௧௮௯
பயனில விலக்கிப் பயனுள சொல்லுக. ௧௯௦

௨௦-ம் அதி.—அழுக்கா றொழித்தல்.

அழுக்கா றயலா ராக்கத்திற் புழுங்கல். ௧௯௧
அழுக்கா றறவினோ ரிழுக்கா றிலதே. ௧௯௨
அழுக்கா றதுபோ லழிப்பதொன் றின்றே. ௧௯௩
அழுக்கா றுளவரை யொழுக்கா றிலையே. ௧௯௪
அழுக்கா றுடையார்க் காக்கமின் றாகும். ௧௯௫
வறுமையும பசியுஞ் சிறுமையு முளவாம். ௧௯௬
அழுக்கா றுடைமைகீழ் வழுக்கா றென்ப. ௧௯௭
விலங்குளு மழுக்கா றிலங்குத லில்லை. ௧௯௮
அறிவுடை மக்க ளதுகொளல் புதுமை. ௧௯௯
அழுக்கா றுளத்திரு தநுதின மோம்புக. ௨௦௦

உக-ம் அதி.—எண்ணெழுத் தறிதல்.

எண்ணெனப் படுவ தெண்ணுநற் கணிதம். உ0க
எழுத்தெனப் படுவ திலக்கிய மிலக்கணம். உ0உ
எண்ணு மெழுத்துங் கண்ணென மொழிப. உ0ங
எண்ணறி யார்பொரு ளெய்துத லரிது. உ0ச
எழுத்தறி யார்பிற வெய்துத லரிது. உ0ரு
எண்ணெழுத் தறிந்தா ரெய்துவர் நான்கும். உ0சா
எண்ணு மெழுத்து மிடைவிடா தாள்க. உ0எ
அவைதாய் மொழிகொளி னதைமுன் பறிக. உ0அ
பின்பவை மிக்குள பிறமொழி யறிக. உ0கூ
அறிவதைக் கசடற வறிந்துகொண் டொழுகுக. உக0

உஉ-ம் அதி.—தொழில் அறிதல்.

மெய்யுறுப் புக்கொடு செய்வது தொழிலே. உகக
தொழிலா லுலகந் தோன்றிநிற் கின்றது. உகஉ
தொழிலிலை யெனிலுல கழிவது திண்ணம். உகங
தொழிலிலார் வறுமையுற் றிழிவெலா மடைவர். உகச
அரியநற் றொழில்சில வறிதல்யார்க் குங்கடன். உகரு
படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க. உகசா
படைவகுத் தமர்செயு நடையெலா மறிக. உகஎ
புலிகடல் விண்மிசை போவவூர்ந் தறிக. உகஅ
எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக. உககூ
உழவுவா ணிகங்கைத் தொழில்சில வறிக. உஉ0

உ௩-ம் அதி.—திருந்தச் செய்தல்.

திருந்தச் செயலியல் பொருந்தச் செய்தல். உஉக
அழகு நிறைவு மமைவுறச் செய்தல். உஉஉ
திருந்தச் செய்தலே செய்தற் கிலக்கணம். உஉ௩
திருந்தச் செயல்பல சீர்களைக் கொணரும். உஉ௪
திருத்தமில் செயலாற் சீர்பல நீங்கும். உஉ௫
சிறுதொழி லெனினுந் திருந்தவே செய்க. உஉ௬
சிறுதொழிற் றொகுதியே பெருந்தொழி லாவது. உஉ௭
செய்யும் தொழிலிலே சிந்தையைச் செலுத்துக. உஉ௮
தொழிலினைக் கியமாய்த் துரிதமாச் செய்க. உஉ௯
பிறர்செய் தொழிற்குப் பின்னிடா வகைசெயல். உ௩0

உ௪-ம் அதி.—நன்றி யறிதல்.

நன்றியென் பதுபிறர் நல்கிடு முதவி. உ௩க
உறவினர் முதவியோ ருதவுதல் கடனே. உ௩உ
பிறர்செயு முதவியிற் பெரிதொன் றின்றே. உ௩௩
உதவியிற் சிறந்த துற்றுழி யுதவல். உ௩௪
உயர்ந்தது கைம்மா றுகவா துதவல். உ௩௫
அறிதலென் றொன்று மதைநினைந் தொழுகல். உ௩௬
உதவியோர் குடியெலா முயர்வுற வுள்ளல். உ௩௭
உதவியோ ரறவுரை யுடனிறை வேற்றல். உ௩௮
உதவியோர் மிகைசெயி னுடனதை மறத்தல். உ௩௯
அறிதற் களவுண் டுதவி சொலக்கெடும். உ௪0

உரு-ம் அதி.—நடுவு நிலைமை.

நடுவு நிலைமைதன் னடுவு ணிற்றல். உசக
பிறவுயிர் நடுவள வுறனடு வின்மை. உசஉ
நடுவறப் பொருளி னடுநிற் கும்பொருள். உசங
அறனெலா நிற்பதற் கஃதா தாரம். உசச
அதுசிறி தசையி னறனெலா மழியும். உசரு
நடுவினு ணிற்பவர் நலனெலாம் பெறுவர். உசசு
நடுவினை விடாரை நானிலம் விடாது. உசஎ
நடுவிகந் தாருடன் கெடுவது திண்ணம். உசஅ
நடுவிகந் தாரை நரகமும் விடாது. உசகூ
ஆதலா னடுவி லசையாது நிற்க. உரு0

உசு-ம் அதி.—அடக்க முடைமை.

அடக்க மனம்புலத் தணுகா தடக்கல். உருக
அறிவினர்க் கென்று மடங்கி யொழுகல். உருஉ
அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும். உருங
அடக்கமில் லாமை யதைக்கடக் கச்செயும். உருச
அடக்கம் பல்வகை யாக்கமுந் தருமே. உருரு
அடக்க மிலாமை யழிவெலாந் தருமே. உருசு
அடக்கமெய் வீட்டிற் கடிப்படி யாகும். உருஎ
அப்படி யேறினு ரடைவரவ் வீடு. உருஅ
அப்படி யேறு ராழ்வர்வெந் நரகு. உருகூ
ஆதலா லடக்க மறுதின மோம்புக. உ.சு0

உஎ-ம் அதி.—ஒழுக்க முடைமை

ஒழுக்க மென்ப துயர்ந்தோர் நடையே. உசுக
அருளறி வமைந்தவை யாள்பவ ருயர்ந்தோர். உசுஉ
அவர்நடை பெரியோர்க் கடங்கி யொழுகல். உசுங
இருக்கை யெழுத லெதிர்பின் செல்லல். உசுச
நினைவுஞ் சொல்லும் வினையுமொன் றாக்கல். உசுரு
மறநெறி விலக்கி யறநெறி செல்லல். உசுசு
தானுற வேண்டுவ வேனோர்க் களித்தல். உசுஎ
தன்னுயிர் போல மன்னுயிர்ப் பேணல். உசுஅ
பகைசெய் தவரொடு நகைசெய் தளாவல். உசுகூ
உயிரெலா மெய்யென வோர்ந்தவை யோம்பல். உஎ0

உஅ-ம் அதி.—அறிவுடைமை.

அறிவு மறமொரீஇ யறத்தின்பா லுய்ப்பது. உஎக
அறிவெஞ் ஞான்று மற்றங் காப்பது. உஎஉ
அறிவு பகைவரா லழிக்கப் படாதது. உஎங
அறிவினை யுடையா ரனைத்து முடையர். உஎச
அறிவில் லாதார் யாதுமில் லாதார். உஎரு
அறிவிற் கறிகுறி யாவன செய்தல். உஎசு
எளியவாச் செலவுரைத் தரியவை யுணர்தல். உஎஎ
பாவம் பழிக்குப் பயந்தொ ழுகல். உஎஅ
உலகினோ டென்று மொத்து நடத்தல். உஎகூ
எதிராக் காத்தெவ் வின்பமு மடைதல். உஅ0

உகூ-ம் அதி.—ஊக்க முடைமை.

ஊக்க முயர்வுற வுனுமன வெழுச்சி. உஅக
ஊக்க முடைமை யுலகெலாங் கொணரும். உஅஉ
ஊக்க மிலாமை யுடையவும் போக்கும். உஅங
ஊக்க முடையா ருயர்ந்தோ ராவர் உஅச
ஊக்க மிலாதா ருயிர்க்கும் பிணங்கள். உஅரு
உயர்ந்தவை யெவையோ வவையெலா முள்ளுக. உஅசு
அவற்றினு ளொன்றை யடைந்திட விரும்புக. உஅஎ
அதனை யடையு மாறெலா மெண்ணுக. உஅஅ
ஒவ்வொன் றினுமுறு மூறெலா மெண்ணுக. உஅகூ
ஊறொழித் ததையுறு முபாயமுங் கருதுக. உகூ0

௩௰-ம் அதி.—முயற்சி யுடைமை.

உயர்வுற வுழைக்கு முடற்றொழில் முயற்சி. உகூக
முயற்சி பலவகை யுயர்ச்சி நல்கும். உகூஉ
முயற்சி யூழையு முதுகிடச் செய்யும். உகூங
முயற்சி யுடையார் மூவுல காள்வர். உகூச
முயற்சி யிலாதா ரிகழ்ச்சி யடைவர். உகூரு
ஊக்கிய வொன்றனை யுடன்கொளத் துணிக. உகூசு
அதிகவூ றுறுநல் லாற்றின் முயல்க. உகூஎ
உறுமூ றொழித்தறி வுரங்கொடு தொடர்க. உகூஅ
தவறினுந் தாழ்ப்பினுந் தளர்ச்சியெய் தற்க. உகூகூ
முயற்சியின் விரிமுத னூலினு ளறிக. ௩00

மாணவரியல் முற்றிற்று.

௩௧-ம் அதி.—இல்வாழ் வுயர்வு.

இல்வாழ் வென்பதோ ரில்லினில் வாழ்தல். ௩0௧
எதிர்பாற் றுணையுடன் வதிதன் மிகநலம். ௩0௨
இல்வாழ் வார்கட னில்லற மியற்றல். ௩0௩
என்றும்வே ளாண்மை யியற்றலே யில்லறம். ௩0௪
இல்வாழ் வில்லெனி லில்லையிவ் வுலகே. ௩0௫
இன்னிலை பெவற்றினு நன்னிலை யென்ப. ௩0௬
எந்நிலை யவர்க்கு மில்வாழ் வார்துணை. ௩0௭
அந்நிலைப் பெருக்கே யாசென வறிக. ௩0௮
அதற்கா நன்முத லன்பெனும் பொருளே. ௩0௯
அதிலாம் பயன்க ளறமுத னன்கே. ௩௧0

௩௨-ம் அதி.—இல் லமைத்தல்.

அகல நீள மரைக்கான் மைல்கொளல். ௩௧௧
ஈரிரு புறமதி லெதிரெதிர் வழிசெயல். ௩௧௨
மத்தியிற் புறமதின் மட்டமே லிற்செயல். ௩௧௩
இல்லிற் கிரா யிரமடி சதுரமாம். ௩௧௪
நிலமேன் மதிற்கு நேர்கால் கீழ்செயல். ௩௧௫
வளியன னீர்மா வழியா வகைசெயல். ௩௧௬
வளியொளி யளவினுள் வரச்செல வழிசெயல். ௩௧௭
பொருட்குஞ் செயற்கும் பொருத்தமாப் பகுத்திடல். ௩௧௮
நிலவறை தான்செய னிதிமிகின் மேற்செயல். ௩௧௯
நற்றரு செடிகொடி யிற்புறத் தமைத்திடல். ௩௨0

இல்வாழ்வியல்.

௩௩-ம் அதி.—உயிர்த்துணை கோள்ளல்.

உயிர்த்துணை தன்னுயிர்க் குதவெதிர் பாற்றுணை. ௩௨௧
அத்துணைக் கெங்கணு மொத்ததொன் றிலதே. ௩௨௨
ஆக்கமுங் கேடு மத்துணை யாலாம். ௩௨௩
கொள்ளு மறிவெலாங் கொண்டுபின் றுணைகொளல் ௩௨௪
கொளுமுன் கொண்டிடிற் குற்றம் பலவாம். ௩௨௫
துணையிழந் தாரை மணப்பது புண்ணியம். ௩௨௬
விரும்பா தவரை விருப்புதல் பாவம். ௩௨௭
துணைநலங் குடிமையே தூய்மையே யொழுக்கமே. ௩௨௮
பருவமே யெழிலே பண்பே யின்சொலே. ௩௨௯
வரவினுள் வாழ்தலே மடிதுயி லிலாமையே. ௩௩0

௩௪-ம் அதி —உயிர்த்துணை யாளுதல்.

இருவரு ளறிவிற் பெரியவ ராள்க. ௩௩௧
ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் சென்க. ௩௩௨
துணைநன் காள்பவர் தொல்லுல காள்வர். ௩௩௩
தன்னுயி ருடல்பொரு டன்றுணைக் குரியன. ௩௩௪
தன்றுணை யுயிர்முத றனக்காங் குரியன. ௩௩௫
இருவராத் தோன்றினு மொருவரே யுள்ளின். ௩௩௬
தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர்த்துக. ௩௩௭
தனதுநன் னெறிதுணை சார்ந்திடச் செய்க. ௩௩௮
இயற்றுவ துணையுட னெண்ணி யியற்றுக. ௩௩௯
உண்பண துணையோ டுடனிருந் துண்ணுக. ௩௪0

௫௫-ம் அதி.—இன்பந் துய்த்தல்.

துணையோ டின்பந் துய்த்தலே சுவர்க்கம். ௫௪௧
துய்க்கு முறையெலாந் தொல்லகப் பொருள்சொலும். ௫௪௨
முறையறி யாதுறல் குறையறி வுயிர்செயல். ௫௪௩
தன்றுணைக் கின்பந் தரத்தரத் தனக்கதாம். ௫௪௪
தானின் புறவெணிற் றனக்கதெய் தாதே. ௫௪௫
ஊட லுணர்தல் புணர்த லதன்வகை. ௫௪௬
ஊட னிமித்த முடனுட னுக்குக. ௫௪௭
இரந்தும் புணர்ந்து முணர்ந்திடச் செய்க. ௫௪௮
இருந்திரங் கத்துணை பிரிந்திடல் நீக்குக. ௫௪௯
துணையழத் துறந்துமெய் யிணைதலன் பிலாவறம். ௫௫0

௫௬-ம் அதி.—காமம் விலக்கல்.

காம மகத்தெழு மாமத வெறியே. ௫௫௧
இன்ப மறிவோ டிருந்தநு பவிப்பதே. ௫௫௨
இரச்சில குறித்தலுற யியைந்திட லின்பம். ௫௫௩
எண்ணிய பொழுதிடத் தியைந்திடல் காமம். ௫௫௪
காம மகப்புறக் கண்களைக் கெடுத்திடும். ௫௫௫
காம பெழுங்காற் கடவுளை யுள்ளுக. ௫௫௬
அறிவெனுந் தோட்டியா னதனைக் காக்க. ௫௫௭
அதைவளர்ப் பவைதமை யகத்தைவிட் டோட்டுக. ௫௫௮
அதையடு மொன்றை யகத்தினுட் கொள்ளுக. ௫௫௯
அதைநன் குள்ளி மதவெறி களைக. ௫௬0

இல்வாழ்வியல்.

௩௭-ம் அதி.—பரத்தையை விலக்கல்.

பரத்தை யின்பினைப் பலர்க்கும் விற்பவள். ௩௬௧
மதுசூ திரண்டினும் பொதுமகள் கொடியள். ௩௬௨
அவணடை யுடைநோக் காதியா லழிப்பள். ௩௬௩
இன்பந் தருதல்போற் றுன்பெலாந் தருவள். ௩௬௪
உடைமுதற் பொருளெலா முயிரொடு கவர்வள். ௩௬௫
அவளினும் வஞ்சக ரவனியி லில்லை. ௩௬௬
அவளினுங் கள்வ ரருளின ரெனலாம். ௩௬௭
அவளுள நினைந்தாற் றவசியுங் கெடுவன். ௩௬௮
அவளா லந்தோ வழிந்தவ ரநேகர். ௩௬௯
அவளிலா நாடே யழிவுறு நாடு. ௩௭0

௩௮-ம் அதி. பரத்தனை விலக்கல்.

தன்றுணை யலாளைத் தழுவுவோன் பரத்தன். ௩௭௧
பரத்தை யினுமிகக் கொடியவன் பரத்தன். ௩௭௨
பொதுமக ளாதலம் முழுமக னாலே. ௩௭௩
நன்மகன் கெடுதலப் புன்மக னாலே. ௩௭௪
மறனெலா நிகழ்வதம் மாபாவி யாலே. ௩௭௫
அவனைக் காண்டலா லழியும் புகழே. ௩௭௬
அவனோடு பேசலா லழியு நிறையே. ௩௭௭
அவனொடு சேர்தலா லழியு மனைத்தும். ௩௭௮
அவனிலா நாடே யாகுநன் னாடு. ௩௭௯
அறனு மளியு மமைவுறு நாடு. ௩௮0

ஙகூ-ம் அதி.—சிற்றினம் விலக்கல்.

சிற்றினங் குணத்திற் குற்றமிகு மாக்கள். ஙஅக
பெருமிதந் தன்னைப் பேணு மாக்கள். ஙஅஉ
அற்பத் தன்மை யளாவிய மாக்கள். ஙஅங
பொறியின் பங்களிற் செறிவுறு மாக்கள். ஙஅச
சுயநயங் கருதும் பயனிலா மாக்கள். ஙஅரு
சிற்றினம் பொருளையுஞ் சீரையு மழிக்கும். ஙஅசா
அற்றமுங் குற்றமு முற்றிடச் செய்யும். ஙஅஎ
முற்றவ நலத்தொடு கற்றவுஞ் சிதைக்கும். ஙஅஅ
நரகும் பழியு நண்ணிடச் செய்யும். ஙஅகூ
சிற்றினப் பற்றினைச் சிறிதும் வேண்டேல். ஙகூ0

சாம். அதி.—பெரியாரைத் துணைக்கோளல்.

பெரியா ரரியன பெரியன செய்பவர். ஙகூக
பொறியா ளுளத்தை யறிவா லாள்பவர். ஙகூஉ
இகபர விபலெலா மெண்ணிநன் கறிந்தவர். ஙகூங
நல்வின வியலெலா நண்ணி நிற்பவர். ஙகூச
பின்னுறுந் தீங்கெலா முன்னறிந் தொழிப்பவர். ஙகூரு
அவரது துணைகொள லரும்பெருங் காப்பு. ஙகூசா
அவரை யறிந்துகொண் டுறுதின மோம்புக. ஙகூஎ
அவர்க்குரி யனவெலா மன்பொடு வழங்குக. ஙகூஅ
அவரோ டெண்ணியே யனைத்துஞ் செய்க. ஙகூகூ
அவருரை பிழையா தியாங்கணு மொழுகுக. சOO

இல்வாழ்வியல்.

சக-ம் அதி.—பேதைமை யொழித்தல்.

பேதைமை யேதங்கொண் டூதியம் விடுதல். சOக
கடிந்தவை தம்பால் காதன்மை செய்தல். சOஉ
நாணன் பருள்புகழ் பேணுத லின்மை, சOங
அறிந்துணர்ந் துரைத்து மடங்கா தொழுகல். சOச
அறத்தை விடுத்து மறத்தைப் புரிதல். சOரு
வினைசெயின் பொய்படும் புனைகொளும் பேதை. சOசா
தமர்பசித் துழலப் பிறர்க்கிடும் பேதை. சOஎ
பேதையோர் காசுறிற் பித்தன் களித்தற்று. சOஅ
அவைபுகிற் பேதை யதனலங் குன்றும். சOகூ
பெரியார் நூல்கொடு பேதைமை களைக. சகO

சஉ-ம் அதி —வெண்மை யொழித்தல்.

வெண்மை யறிவினை விடுத்த தன்மை. சகக
ஒண்மை யுடையமென் றுளத்தொடு செருக்கல். சகஉ
ஈயவேண் டியவிடத் தீயா திவறல். சகங
குற்றம் பலவுஞ் சுற்றமாக் கொள்ளல். சகச
கற்றில கற்றவாக் காட்டி நடித்தல். சகரு
அருமறை விடுத்துப் பெருமிறை கொள்ளல். சகசா
செய்வன சொல்லியுஞ் செய்யா திழுக்கல். சகஎ
உலகின ருளதென்ப திலதென மறுத்தல். சகஅ
இன்மையு ளின்மை வெண்மை யொன்றே. சககூ
ஒண்மைசா னூல்கொடு வெண்மையைக் களைக. சஉO

சா-ம் அதி.—நெடுநீ ரொழித்தல்.

நெடுநீர் கால நீள விடுதல். சஉக
ஒருகணச் செயலைமற் றொன்றற் கீதல். சஉஉ
நெடுநீர் குறைபல தருமியல் புடையது. சஉங
நெடுநீர் சிறிதுறி னடுமதூஉம் பெருகி. சஉச
நெடுநீ ரறவிடிற் படுபொரு ளாகும். சஉரு
நெடுநீர் விடற்கந் நினைவையுட் கொள்ளுக. சஉசா
நெடுநீ ரால்வருங் கெடுதியை யுள்ளுக. சஉஎ
எக்கணத் தெஃதுறு மக்கணத் ததைச்செயல். சஉஅ
உறுவது பெரிதென வுற்றதை வைத்திடேல் சஉகூ
உற்றதைச் செய்துபி னுறுவதை யெண்ணுக. சஙo

சச-ம் அதி.—மறவி யொழித்தல்.

மறவிதன் கடமையை மனத்திலுன் னாமை. சஙக
மறவியூக் கத்தின் மறுதலை யாகும். சஙஉ
மறவி பலவகை யிறவையு நல்கும். சஙங
மறவியை யடுத்தவர் மாண்பெலா மிழப்பர். சஙச
மறவியை விடுத்தவர் மாநிலத் துயர்வர். சஙரு
மறவியை விடற்கு மனத்தினன் குள்ளுக சஙசா
காலையு மாலையுங் கடவுளைத் தொழுக. சஙஎ
மா ணுயர் நூல்சில மனனஞ் செய்க. சஙஅ
விடிந்தபின் செய்பவை விடியுமு னுள்ளுக. சஙகூ
பகலிற் செய்தவை யிரவினன் காய்க. சசo

இல்வாழ்வியல்.

௪௫-ம் அதி.—மடி யோழித்தல்.

மடிதஞ் செயல்களின் மந்த முறுதல். ௪௪௧
மடிமெய்ம் முயற்சியின் மறுதலை யாகும். ௪௪௨
மடிதமை யொன்னார்க் கடிமைப் படுத்தும். ௪௪௩
மடியினை யுடையவர் குடியொடு கெடுவர். ௪௪௪
மடியினை விடுத்தவர் படியெலாங் கொள்வர். ௪௪௫
மடியினை விடற்கு மனத்தினன் குள்ளுக. ௪௪௬
காலைமெய்ப் பயிற்சி சோலைநீர்க் குளிகொளல். ௪௪௭
இளம்பக லுணவுமிரை யிராவுண வரைகொளல். ௪௪௮
இரவினல் யாமத் தெல்று முறங்குக. ௪௪௯
பயனுள சிலசொற் பார்த்துப் பேசுக. ௪௫௰

௪௬-ம் அதி.—துயி லொழித்தல்.

உடம்புள வயர்வினை யொழிப்ப துறக்கம். ௪௫௧
அவ்வயர் வளவிற் கதிகமா வதுதுயில். ௪௫௨
சுழுத்தியா முறக்கஞ் சுகத்தை வளர்க்கும். ௪௫௩
கனவுக ளாந்துயில் கவலையை வளர்க்கும். ௪௫௪
துயில்கொள வழிவாந் துயில்விட வாக்கமாம். ௪௫௫
அயர்விற் கமையு மைம்மூன்று நாழிகை. ௪௫௬
மற்றைய பொழுதெலா மாண்டொழில் புரிக. ௪௫௭
தொழில்செயும் பொழுது துயில்வரி னுலாவுக. ௪௫௮
கைத்தொழின் முதலிய மெய்த்தொழில் செய்க. ௪௫௯
அவசிய மெனினுண வரையினுஞ் சுருக்குக. ௪௬0

4

சஎ-ம் அதி.—செருக் கொழித்தல்.

செருக்கென் பதுதன் பெருக்கத் தகங்கொளல். சசுக
அஃதறி யாமையி னங்குர மென்ப. சசுஉ
ஆன்ம வுயர்வினை யழிப்பதச் செருக்கு. சசுந
அடங்கா வுளத்தை யளிப்பதச் செருக்கு. சசுச
அழியு முடம்பை யளிப்பது மஃதே. சசுரு
செருக்கினர் தம்மெய்த் திறத்தினைக் காணார். சசுசு
தம்பகைத் திறத்தைத் தாழ்த்தியே யெண்ணுவர் சசுஎ
இன்பினு மடியினு மிறந்து படுவர். சசுஅ
துயிலு மறவியுந் தொடர்ந்து கொள்வர். சசுகூ
புகழெலாம் போக்கி யிகழெலா மீட்டுவர். சஎ0

சஅ-ம் அதி.—அச்ச மொழித்தல்.

அச்ச மனமுட லழிவுற நடுங்கல். சஎக
அஃதறி யாமையி னந்தமென் றுணர்க. சஎஉ
அறம்புகழ் செய்தலா லழியினும் வாழ்வாம். சஎந
மறம்பழி செய்தலால் வாழினு மழிவாம். சஎச
அறம்புகழ் செய்வதற் கஞ்சுதன் மறனே. சஎரு
மறம்பழிக் கஞ்சுதன் மாண்புடை யறனே. சஎசு
அறநெறி மறந்தரின் மறநெறி யாகும். சஎஎ
மறநெறி யறந்தரி னறநெறி யாகும். சஎஅ
அச்ச முடையார்க் கெச்சமிங் கில்லை. சஎகூ
அச்ச மிலார்க்கு நிச்சலு மெச்சமாம். சஅ0

இல்வாழ்வியல்.

௪௯-ம் அதி.—இடுக்க ணழியாமை.

இடுக்கண் டுயரினைக் கொடுக்குமிடை யூறு. ௪௮௧
இடுக்க ணுற்றுழி நகினது தான்கெடும். ௪௮௨
இடுக்க ணுக்குள நெகினது பெருகும். ௪௮௩
இடுக்கண் புறத்துள தென்பது பொய்ம்மை. ௪௮௪
இடுக்க ணகத்துள தென்பது மெய்ம்மை. ௪௮௫
இடுக்க ணகத்ததென் றெண்ணவஃ தழியும். ௪௮௬
இடுக்கணி லழியா ரிடுக்க ணழியும். ௪௮௭
இடுக்கண் வலியினைக் கொடுக்குந் திறத்தது. ௪௮௮
இடுக்க ணறிவினை யீயு மியலது. ௪௮௯
இடுக்கணிற் றளரா ரெண்ணிய முடிப்பர். ௪௯௦

௫௰-ம் அதி.—பற்றுளம் விடுதல்.

பற்றுளம் பொருளினிற் பற்றுள நெஞ்சம். ௪௯௧
ஈயா துண்ணு தெண்ணிவைத் திவறல் ௪௯௨
பற்றுள மரில்பல வற்றுளும் பெரிது. ௪௯௩
பற்றுளம் பல்வகைக் குற்றமு நல்கும். ௪௯௪
பற்றுளத் தாலருஞ் சுற்றமு நீங்கும். ௪௯௫
பற்றுளத் தார்பொருண் முற்று மிழப்பர். ௪௯௬
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டிழப்பர். ௪௯௭
பற்றுளம் விடுத்தவர் பாரெலாங் கொள்வர். ௪௯௮
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டடைவர். ௪௯௯
பற்றுளப் பேயினைச் செற்றுடன் றுரத்துக. ௫௦௦

௫௧-ம் அதி.—தன்னைப் பேணல்.

தன்னைப் பேணுத றன்முதற் கடமை. ௫௦௧
தன்னைப் பேணார் தாழ்வே யடைவர். ௫௦௨
தன்னைப் பேணுவோர் தலைமை யெய்துவர். ௫௦௩
பேணல் பெருமை யெலாமுற முயறல். ௫௦௪
உடல்பொருள் வினைமொழி திடனறிந் தின்புறல். ௫௦௫
பொருளு மொழுக்கமும் புகழும் பெருக்கல். ௫௦௬
உடம்போர் யானையி னுரமுற வளர்த்தல். ௫௦௭
மனமுயர்ந் தவையெலாந் தினமுனைப் பயிற்றல். ௫௦௮
அறிவின் மலனொழித் தழுக்குறா தமைதல். ௫௦௯
தன்னுயிர்த் துணையைத் தனைப்போ லாக்கல். ௫௧௦

௫௨-ம் அதி.—உற்றாரைப் பேணல்.

உற்றார் பெற்றா ருறவினர் பலருமே. ௫௧௧
தன்னுற வினரெலாந் தன்றுணைக் கன்னர். ௫௧௨
தன்றுணை யுறவினர் தனக்காங் கன்னர். ௫௧௩
தாயுந் தந்தையுந் தான்றொழுந் தகையர். ௫௧௪
அவரைப் பேணுத லரும்பெருங் கடனே. ௫௧௫
சோதர ருற்றுழி யாதர வாவர். ௫௧௬
அவரைப் பேணுத லாக்கம் பேணலே. ௫௧௭
மற்றுளா ருந்தமைச் சுற்றுறப் பேணுக. ௫௧௮
உற்றவர்ப் பேணிற் பற்றல ரொழிவர். ௫௧௯
உற்றார் பெருகி னுரமிகப் பெருகும். ௫௨௦

இல்வாழ்வியல்.

௫௩-ம் அதி.—விருந்தினரைப்பேணல்.

விருந்தினர் முன்னர்த் தெரிந்திலாப் புதியர். ௫௨௧
விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகை யோரே. ௫௨௨
விருந்தின ருண்ணலம் பொருந்தினர்க் கொள்க. ௫௨௩
விருந்தினர்க் குணவுநன் மருந்தென வழங்குக. ௫௨௪
உடையிடம் படுக்கை குடைகாப் புதவுக. ௫௨௫
உளமறிந் தேனைய வளவறிந் தீக. ௫௨௬
இன்ப மவருற வின்சொல் வழங்குக. ௫௨௭
அவரறிந் தவையெலா மறிந்துளங் கொள்க. ௫௨௮
அவருய ரொழுக்கெலா மறிந்துகைக் கொள்க. ௫௨௯
செல்வுழி யுடன்சென் றுள்ளிடப் பிரிக. ௫௩௦

௫௪-ம் அதி.—முன்னோரைப் பேணல்.

முன்னோர் துஞ்சிய தன்னுற வினரே. ௫௩௧
அவரைப் பேணலா லாம்பல நலமே. ௫௩௨
அவரைப் பேணுமா றடிக்கடி யுள்ளல். ௫௩௩
அவர்தொடங் கியவறந் தவறுறு தாற்றல். ௫௩௪
அவர்செய வெண்ணிய வறங்களு மியற்றல். ௫௩௫
அவர்நற் குணனெலா மறிந்துகைக் கொள்ளல். ௫௩௬
அவர்நற் செயலெலா மழியாது நிறுத்தல். ௫௩௭
அவர்நற் பெயர்தம தருமகார்க் களித்தல். ௫௩௮
அவர்பெயர் விளங்கிட வறம்பல புரிதல். ௫௩௯
அவர்க்குறும் பிறவு மன்பொடு செய்தல். ௫௪௦

௫௫-ம் அதி.—புதல்வரைப் பேணல்.

புதல்வரே தம்மரும் பொருளென மொழிப. ௫௪௧
நன்றுசெய் புதல்வரா னரகறு மென்ப. ௫௪௨
பொருளுங் குடியும் புகழுமா மவரால். ௫௪௩
துணைதரும் புதல்வர்க் கிணைபிற ராகார். ௫௪௪
பிறரைப் புதல்வராப் பெறுதலும் வழக்கே. ௫௪௫
மிகமிக வருந்தியும் புதல்வரை வளர்க்க. ௫௪௬
இளமையி னவர்நல் வினைமுறச் செய்க. ௫௪௭
தக்கவா சிரியரைச் சார்ந்திடச் செய்க. ௫௪௮
கல்வியு மொழுக்கமுங் கைக்கொளச் செய்க. ௫௪௯
இல்வாழ் வாசுற வல்லுந ராக்குக. ௫௫0

௫௬-ம் அதி.—அன்பு வளர்த்தல்.

அன்பெனப் படுவ தகத்தி னுருக்கம். ௫௫௧
ஆர்வல ருறுறி னதுகண் ணீராம். ௫௫௨
அவரு ளொழிக்குந் தவலிலா முயற்சியாம். ௫௫௩
ஆருயிர் பெற்றதிங் கன்புசெய் தற்கே. ௫௫௪
அன்புபா ராட்டற் காமிடந் தானே. ௫௫௫
தன்னுயிர்த் துணையே தன்னரும் புதல்வரே. ௫௫௬
தன்பெற் றோரே தன்சகோ தரரே. ௫௫௭
தன்னா சிரியரே தன்னுற வினரே. ௫௫௮
தன்னூ ராரே தன்னாட் டினரே. ௫௫௯
மனிதர் சமூகமே மன்னுயி ரனைத்துமே. ௫௬0

இல்வாழ்வியல்.

ருஎ-ம் அதி.—பொறுமை கொள்ளல்.

பொறுமை பிறர்மிகை பொறுக்கு நற்குணம். ருசுக
தன்னலங் கெடுங்காற் சகிப்பது பொறுமை. ருசுஉ
பொதுநலங் கெடுங்காற் பொறுப்பது பிழையே ருசுந
வறுமைப் பிணிக்குப் பொறுமைநன் மருந்தாம். ருசுச
சிறுமையை வளர்ப்பது பொறுமையில் லாமை. ருசுரு
பொறுமையைக் கொண்டவர் புவியெலாங் கொள்வர். ருசுசு
பொறுமையை யிழந்தவர் புசிப்பவு மிழப்பர். ருசுஎ
ஒறுத்தார்க் கொருகணத் தொருசிறி தின்பமாம். ருசுஅ
பொறுத்தார்க் கென்றும் பொன்று மின்பமாம். ருசுகூ
ஒறுத்தார் சிறியர் பொறுத்தார் பெரியர். ருஎ0

ருஅ-ம் அதி.—ஒப்புர வொழுகல்.

ஒப்புர வூரா ரொப்பு நன்னடை. ருஎக
ஒப்புர வுயர்தர வொழுக்கத் தின்முதல். ருஎஉ
ஒப்புர வொழுகுவார்க் குறவினர் பெருகுவர். ருஎந
ஒப்புர விலாரை யொருவருந் தழுவார். ருஎச
அறிஞரி னொப்புர வறவோர்க் குதவல். ருஎரு
துறந்தா ரிறந்தார் துவ்வார்க் குதவல். ருஎசு
ஊர்ப்பொது நன்மைக் குழைத்தெலாஞ் செய்தல். ருஎஎ
ஊரார் நன்மை தீமைக் குதவல். ருஎஅ
ஊரார் வேண்டுவ வுவந்துட னளித்தல். ருஎகூ
ஊரா ராணைக் குட்பட் டொழுகல். ருஅ0

ருகூ-ம் அதி.—ஈகை புரிதல்.

இல்லார்க் கீவதே யீகை யென்ப. ருஅக
மற்றையோர்க் கீதன் மாற்றிலா மடமை. ருஅஉ
இல்லா ருள்ளு நல்லார்க் கீக. ருஅங
பிறருக் கீதல் பிழையென வறிக. ருஅச
மடையரே மடியரே பிணியரே யில்லார். ருஅரு
மடையர்க் கீக மதியெனு மொன்றே. ருஅசா
மடியர்க் கீக தொழிலெனு மொன்றே. ருஅஎ
மற்றையோர்க் கீக மருந்து ணிடனே. ருஅஅ
உடையவ ரீதற் குரிய ராவர். ருஅகூ
ஈகை புகழ்சிறப் பெல்லா நல்கும். ருகூ0

சூ0-ம் அதி.—புகழ் செய்தல்.

புகழுப ருலகம் புகலு நன்மொழி. ருகூக
புகழ்செய் தவரே பொன்றுது நிற்பவர். ருகூஉ
அறமுத னான்கு மாற்றிமெய் யடைந்தவர். ருகூங
புகழ்செய் யாரே பொன்றி யொழிந்தவர். ருகூச
நான்கி லொன்றையு நண்ணு திழிந்தவர். ருகூரு
மெய்ப்புகழ் தருவன மெய்யிய லடைதல். ருகூசா
உலக முழுவது மொருங்கா சாளுதல். ருகூஎ
அறமுத னான்கு மறிந்துசெய் துரைத்தல். ருகூஅ
உற்றவர்க் கெல்லா முடனுவந் துதவல் ருகூகூ
இல்லார்க் கெல்லா மீந்து வாழ்தல். சா00

அரசியல்.

சுக-ம் அதி.—அரசு நலம்.

அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது. சு0க
அதனலன் மாணவ ருநல ஞூதல். சு0உ
இல்வாழ் வியலெலா மியைந்துநன் கொழுகல். சு0ங
சுற்றம் பெருக்கல் சூழ்ச்சி புரிதல். சு0ச
தெரிந்து தெளிதல் செய்வினை யாளுதல். சு0ரு
ஒற்றுரை நூலமைச் சொருங்குட னுளுதல். சு0சு
பெரியமன் னரைச்சார்ந் தரியவை பெறுதல். சு0எ
நாடரண் பொருள்படை நட்பினி தாளுதல். சு0அ
வினைத்திற னினைத்து நினைத்தறிந் தாற்றல். சு0கூ
முறைசெய் தறம்புரிந் திறையென நிற்றல். சுக0

சுஉ-ம் அதி.—சுற்றல் பெருக்கல்.

சுற்றமென் பதுதனைச் சூழ விருப்பது. சுகக
சுற்றமு மறிவுபோ லற்றங் காக்கும். சுகஉ
சுற்ற மின்மை யற்றமுறு விக்கும். சுகங
சுற்ற முடையார் சூழ்வன முடிப்பர். சுகச
சுற்ற மிலார்க்குச் சூழ்ச்சியே யில்லை. சுகரு
குற்றம் விடுதலாற் சுற்றுறுஞ் சுற்றம். சுகசு
கொடையா வின்சொலாற் கூடிடுஞ் சுற்றம். சுகஎ
வாய்மையாற் பொறுமையாற் றூய்மையாஞ் சுற்றம். சுகஅ
கொள்ளல் கொடுத்தலாற் குலாவுறுஞ் சுற்றம். சுககூ
உணர்ச்சி பழகலா லுதவுஞ் சுற்றம். சுஉ0

5

சுங-ம் அதி.—கண்ணோட்டம்.

கண்ணோட்டஞ் சுற்றமேற் கண்ணோடி வீழ்தல். சுஉக
சுற்றங் கண்டுழிக் குற்ற மறத்தல். சுஉஉ
சுற்றங் கண்டுழி யுற்றன செய்தல். சுஉங
கண்ணிற் கழகு கண்ணோட்ட மென்ப. சுஉச
உளத்தொடு சேர்ந்தகண் ணோட்ட முயர்ந்தது. சுஉரு
தீவினை யாளர்பாற் றீதுகண் ணோட்டம். சுஉசு
கண்டுநஞ் சுணல்கரை கடந்தகண் ணோட்டம். சுஉஎ
கருமங் கெடாவகை கண்ணோடல் தக்கது. சுஉஅ
சிறுவர்பா லென்றுஞ் சிறிதுகண் ணோடுக. சுஉகூ
முறைசெயும் பொழுததை முற்றுமே விடுக. சுங0

சுச-ம் அதி.—சூழ்ச்சி புரிதல்.

இயற்றுவ தெல்லா மெண்ணியே யியற்றுக. சுஙக
எண்ணு தியற்றுதல் கண்ணிலார் நடையாம். சுஙஉ
இயற்றத் தொடங்கி யெண்ணுத லிழுக்காம். சுஙங
இயற்றுமுன் செயலி னிபல்பினை யாய்க. சுஙச
அறமெனிற் சுற்றுறு மறிஞரோ டெண்ணுக. சுஙரு
வரவு செலவு வரும்பய னெண்ணுக. சுஙசு
செய்வலி செய்வழி செய்பவர்க் கருதுக. சுஙஎ
வரவிற் செலவு வளருமேல் விடுக. சுஙஅ
பெரும்பயன் றராதெனிற் பேணு தொழிக சுஙகூ
செய்வலி நெறியாள் சீரின் றேல்விடல். சுச0

அரசியல்.

சுரு-ம் அதி.—தெரிந்து தெளிதல்.

செயல்செய் வாரிய லுயர்குடிப் பிறப்பே. சுசக
செம்மையே வாய்மையே தீவினை யின்மையே. சுசஉ
அறிவே யன்பே யழகே யாற்றலே. சுசங
பண்பே பொறையே பணிவே யின்சொலே. சுசச
மறவி நெடுநீர் மடிதுயி லிலாமையே. சுசரு
அவாஅ வின்மையே தவாவினை யுண்மையே. சுசசு
பொதுச்சிறப் பெனுமிரு மதிவளர் கல்வியே. சுசஎ
இவையெலா மியைந்துள வினமெலாந் தெரிக. சுசஅ
அறம்பொரு ளின்புயி ரச்சத்தாற் றெளிக. சுசகூ
தெளியுமுன் கொண்டிடேல் தெளிந்தபி னையுறேல். சுருO

சுசு-ம் அதி.—செய்வினை யாளுதல்

நன்றுதீ தெண்ணி நலம்புரிவா னுள்க. சுருக
வருவாய் பெருக்கி வளஞ்செய்வா னுள்க. சுருஉ
ஊறுறு தாற்று முணர்வோனை யாள்க. சுருங
உறுமு றொழிக்கு முரவோனை யாள்க. சுருச
வினையினிற் றிரியா மெய்யனை யாள்க. சுருரு
இதையிதான் முருப்பனென் றதையவன் பால்விடல். சுருசு
அதன்பி னவனையே யதற்குரிய னுக்குக. சுருஎ
வினைக்கண் வினைசெயும் வீரனை யையுறேல். சுருஅ
செயல்செயும் பலரையுந் தினந்தொறு நாடுக. சுருகூ
செயன்முறை செய்தவன் சிந்தைகண் டாற்றல் சுசுO

சுஎ-ம் அதி.—ஒற் ருளுதல்.

ஒற்றுவினை ஞர்பகை சுற்றமறைந் தறிவது. சுசுக
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தறிவது. சுசுஉ
உறுப்பெலாஞ் சிதைப்பினு முகாஅமை வல்லது. சுசுங
உலகெலா நிகழ்பவை பொற்றினு லறிக. சுசுச
ஒற்றுரை சான்றநூல் கொற்றவன் கண்களே. சுசுரு
ஒற்றிலார் கொற்றமும் வெற்றியு மிழப்பர். சுசுசு
ஒற்றுரைத் ததனைவே ருெற்றினு லொற்றுக. சுசுஎ
ஒற்றுமூன் ருெத்திடி னுண்மையென் றறிக. சுசுஅ
ஒற்ருெற் றயிரா துணரா தாள்க. சுசுகூ
ஒற்றில் கயலா ருணர்ந்திடா தீக. சுஎ0

சுஅ-ம் அதி.—உரைநூ லாளுதல்.

உரைநூல் புரைதவிர் புகழ்சால் நூல்கள். எகக
அழியாப் பொருள்களை யறைபவே புகழ்பெறும். சுஎஉ
அவைமெய்ப் பொருளே யதிற்சே ரறனே. சுஎங
பொருளிலா தறனில்லை புணர்விலா தொழிவில்லை. சுஎச
ஆதலா லவையு மழியாய்ப் பொருள்களே. சுஎரு
அவ்வைம் பொருளினு மடங்காப் பொருளில்லை. சுஎசு
புதுநூ லுடனே புகழ்பெற லரிது. சுஎஎ
ஆதலா லுரைநூ லனவசொலுந் தொன்னூல். சுஎஅ
அவைபல மொழியிலு மமைந்துள மறைகள். சுஎகூ
இனியநந் தமிழி னிலக்கிய மிலக்கணம். சுஅ0

அரசியல்.

௬௯-ம் அதி.— அமைச் சாளுதல்.

அமைச்சா சிற்கினி தமைவன சொல்வது. ௬௮௧
அரசுசொல் வனவு மமைத்துத் தருவது. ௬௮௨
அரசின் செயற்கெலாஞ் சிரசென நிற்பது. ௬௮௩
அரசின் குடிக்கெலா மன்னையா நிற்பது. ௬௮௪
அரசுயிர்த் துணையா வறனெலாஞ் செய்வது. ௬௮௫
அதனல மரசிய லனைத்துநன் காளுதல். ௬௮௬
நாலிய லுலகிய லுண்ணறி வுடைமை. ௬௮௭
காமமும் வெகுளியுங் கைக்கொளா தமைதல். ௬௮௮
அமைச்சுபட் டிமைப்போ லமைந்தறம் புரிக. ௬௮௯
அரசுவிக் கிரமனி னன்புகொண் டாள்க. ௬௯0

௭0-ம் அதி.—அறிந்து சொல்லல்.

நாநல மழிபா நலமென மொழிப. ௬௯௧
ஆக்கமுங் கேடு மதின்வரு மென்ப. ௬௯௨
அறனும் பொருளு மதின்வரு மன்ற. ௬௯௩
அகிலநிற் பதுமஃ தலமைதலா னன்றே. ௬௯௪
சொல்லு மிடமெலா மொல்லும் வகைசொலல். ௬௯௫
அவையறம் பொருடர வமைத்துச் சொல்லல். ௬௯௬
கேட்போர்க் கின்பங் கிளைக்கச் சொல்லல். ௬௯௭
சுருங்கத் தொகுத்து விளங்கச் சொல்லல். ௬௯௮
வரிசைப் படுத்தி மனங்கொளச் சொல்லல். ௬௯௯
மறுக்கா விதத்து மாறுறச் சொல்லல். ௭00

எக-ம் அதி.—பண்பு செய்தல்.

பாடறிந் தொழுகலே பண்பென மொழிப. எ0க
பண்பா லுலக முண்டெனும் பொதுமறை. எ0உ
மக்களுட் பண்பிலார் மரமெனப் படுவர். எ0ங
பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக. எ0ச
சிறியரை யடக்கிச் செய்வன செய்க. எ0ரு
மெல்லியன் மகளிருண் மென்மைபா ராட்டுக. எ0சு
நன்பருள் ளுவப்புற நண்ணிநின் றொழுகுக. எ0எ
பகைவருள் ளூட்கமே னகைபுரிந் தொழுகுக. எ0அ
சலவருட் சாலச் சலஞ்செய் தொழுகுக. எ0கூ
பண்பர சின்பெலா மெண்பதத் தாலாம். எக0

எஉ-ம் அதி.—பெரிய வரசரைச் சேர்தல்.

பெரிய வரசர் பெரியநா டாள்பவர். எகக
சிறிய வரசர்பாற் றிறைநனி கொள்பவர். எகஉ
எவ்வர சர்க்கு மிளையாத் திறத்தினர். எகங
திறமெலாம் பெருக்கி யறமெலாஞ் செய்பவர். எகச
மறஞ்செயு மரசரின் றிறஞ்சிதைத் தொழிப்பவர். எகரு
பெரிய வரசர் பெரியார்க் கடுத்தவர். எகசு
அவரைச் சேர்தலா லரும்பெரு மாக்கமாம். எகஎ
அமைச்சராய்ப் புலவரா யவரவை சேர்க. எகஅ
அருவினைத் தலைவரா யவர்பாற் சேர்க. எககூ
அவருளங் கொளநடந் தரியவை பெறுக. எஉ0

எ௩-ம் அதி.—அவர்பா லொழுகல்.

அகலா தணுகா தனற்காய்வார் போல்க. எ௨௧
அன்பொடு மெய்யொடு மடங்கிநின் றொழுகுக. எ௨௨
அவர்முன் செவிச்சொ லயனகை பொருந்தேல். எ௨௩
அவர்சொலி னலாலொன் றறிந்திட விரும்பேல். எ௨௪
அவர்க்கா வனவு மவையங்கண் டியம்புக. எ௨௫
அவர்விழை பவற்றை யகத்தினும் விழையேல். எ௨௬
அவரை யுறவகை யாங்கனு மொழுகுக. எ௨௭
இளைய ரினத்தின ரெனநினைந் திகழேல். எ௨௮
பழைபவ ரெனினும் பண்பிலா தனசெயேல். எ௨௯
தனக்குவேண் டுவவவர் சாற்றெனிற் சாற்றுக. எ௩௰

எ௪-ம் அதி.—குறிப்புணர் வுடைமை.

குறிப்புணர் விரண்டு கூறு கும்மே. எ௩௧
குறிப்பி னுணர்தலே குறிப்பி னுணர்தலே. எ௩௨
குறிப்பி னுணர்த்தல் கூறு துணர்த்தல். எ௩௩
குறிப்பி னுணர்தல் கூறு துணர்தல். எ௩௪
இவையர சமைச்சிற் கின்றியமை யாதவை. எ௩௫
அகத்தினி லுள்ளது முகத்தினிற் றெரியும். எ௩௬
மொழியான் மறைப்பினு முகமதைக் காட்டும். எ௩௭
முதுவர் குறிப்பினன் மொழிகுவ ரறிகுவர். எ௩௮
முகங்கண் களினன் மொழிகுவ ரறிகுவர். எ௩௯
முன்சொல் குறிப்பினு மொழிகுவ ரறிகுவர். எ௪௰

எ௫-ம் அதி.—அரியவை பெறுதல்.

அரியவை நட்புநா டரண்பொருள் படையே. எ௪க
அவையொருங் கெய்தின்வா யமிழ்தகடைந் தற்றே. எ௪உ
ஒன்றெய் தினும்பிற வுண்டா மெளிதே. எ௪௩
ஒன்று மிலாது நன்றுற லரிது. எ௪௪
அவைபெரு மன்னர்க் கரியன வல்ல. எ௪௫
அவருளங் கொளச்சொலி னவரவை யளிப்பர் எ௪௬
அவரையோர் தந்தையா வறிந்திட வுடன்படல், எ௪எ
அவர்பின் வேண்டுவ வளித்திட வுடன்படல். எ௪அ
அவரது பகையை யளித்திட வுடன்படல். எ௪௯
பிறவுமொத் தியைவன பெற்றலாம் பெருக்குக. எ௫௦

எ௬-ம் அதி.—நாடு.

நாடு நாடுவ நல்குநா னிலத்தது. எ௫க
மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம். எ௫உ
அவை குறிஞ்சி முல்லை மருத நெய்தல். எ௫௩
அவைபல வுயிருணு மாமுதற் றருங்கும். எ௫௪
ஒருமொழி வழங்குவ தொருதனி நாடு. எ௫௫
ஒருபெருங் கண்டத் துறுவவக நாடு. எ௫௬
பிறபெருங் கண்டத் துறுவபுற நாடு. எ௫எ
பெருங்கடன் மலையாற் பிரிவது கண்டம். எ௫அ
கடலுந் தீவுமயற் கண்டமொடு சேரும். எ௫௯
பலபெருங் கண்டமு முலகெனப் படுமே. எ௬௦

அரசியல்.

௭௭-ம் அதி.—நாட்டுச் சிறப்பு.

நாட்டுச் சிறப்புநல் வளன்பல வமைதல். ௭௬௧
உயிர்களு முணுக்களு மொக்க நிறைதல். ௭௬௨
நிலநதி மலைகட னலநிறம் வளர்தல். ௭௬௩
அரும்பொருள் பெரும்பொரு ளாலய மிகுதல். ௭௬௪
அரணு மரசு மமைந்துநடு நிற்றல். ௭௬௫
உறுபசி யரும்பிணி செறுபகை யிலாமை. ௭௬௬
செல்வமு மின்பமுஞ் சீரும் பெருகல். ௭௬௭
ஒழுக்கமுங் கல்வியு முயர்நிலை நிற்றல். ௭௬௮
திறந்தகை வாய்மை யறந்தவம் வளர்தல். ௭௬௯
அருளுமெய் யறிவு மமைந்து பரவல். ௭௭௦

௭௮-ம் அதி.— அரண்.

அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு. ௭௭௧
இயற்கையுஞ் செயற்கையு மியைந்தா ணுகும். ௭௭௨
அரண்புற வரணக வரணென விரண்டு. ௭௭௩
புறவரண் புறநா டுருவகை காப்பது. ௭௭௪
அகவர ணரசுயி ரரும்பொருள் காப்பது. ௭௭௫
கண்டத்தைச் சூழ்ந்துள கடனீர் புறவரண். ௭௭௬
அதனை யடுத்துள வருநிலம் புறவரண். ௭௭௭
நிலத்தை யடுத்துள மலைத்தொடர் புறவரண். ௭௭௮
மலையை யடுத்துள மரக்காடு புறவரண். ௭௭௯
நாட்டகத் தமையுமிந் நான்கு மகவரண். ௭௮௦

௭௯-ம் அதி.—அரணமைத்தல்.

அரணிலார்க் கரசிலை யரசிலார்க் கரணிலை. ௭௮௧
அரணன் கமைந்திடி னரசெலாங் கொள்ளும். ௭௮௨
அரணன் கமைத்தலோ ரரும்பெருஞ் செயலே. ௭௮௩
அரணெலா முரியரா லமைந்திடல் வேண்டும். ௭௮௪
புறவர ணுன்சையும் பூரண மாக்குக. ௭௮௫
நாட்டி லகவர ணலம்பெற வியற்றுக. ௭௮௬
அவற்று ளகழ்மதி லரசில மாக்குக. ௭௮௭
புறவக நெறிகளைத் திறனுடன் பொருத்துக ௭௮௮
அவைகணத் தடைக்கவுந் திறக்கவும் வேண்டும். ௭௮௯
நெறியுள விடனெலாம் பொறிகளை நிரப்புக. ௭௯௦

௮௰-ம் அதி.—அரணளித்தல்.

அரண்படை யளிக்குமஃ தளிப்பது படையே. ௭௯௧
நீரி லரும்படை நெடுங்கல நிறுத்துக. ௭௯௨
நிலத்தி லருந்தொழில் வலப்படை நிரப்புக. ௭௯௩
மலைமதில் களிலரு வினைப்படை நாட்டுக. ௭௯௪
காட்டுட் பகைகொலுங் கரவெலா மாக்குக. ௭௯௫
அரணுட் புறனெலா மாம்வினை வாக்குக. ௭௯௬
உடைபடைக் கலமெலாந் தடைவரா தியற்றுக. ௭௯௭
அவரவர் வசிப்புக் காமில மாக்குக. ௭௯௮
அகழ்மதில் சூழிலத் தரசினம் வாழ்க. ௭௯௯
அகவரண் களையர சநுதினங் காண்க. ௮௦௦

௧௧-ம் அதி.—பொருள்.

விற்கத் தக்க விலையுடை யதுபொருள். ௧௦௧
பொருளின் பறம்புகழ் பொருந்திடச் செய்யும். ௧௦௨
பயனழ கருமையா லுயர்வஃ தடையும். ௧௦௩
விலையிடப் பொழுதால் வேறுபா டுற்றிடும். ௧௦௪
பொருண்மண் முதனூற் பூதங்கள் பிராணிகள். ௧௦௫
அவற்றினின் றுவன வாக்கப் படுவன. ௧௦௬
உத்தம மவற்றுண் முத்தாதி மணிகளே. ௧௦௭
வயிரமுதல் ரத்நமே பொன்முத லுலோகமே. ௧௦௮
நவதா னியமே நன்மரஞ் செடிகளே. ௧௦௯
உணவுடை யிலஞ்செல வணியமர்க் குரியவே. ௧௧௦

௧௨-ம் அதி.—பொருட் சிறப்பு.

பொருளிற் சிறந்தது புகலவொன் றில்லை. ௧௧௧
அதுநினைத் தவையெலா மளிக்குந் திறத்தது. ௧௧௨
நீர்சூ ழுலகெலா மோர்நொடி யிற்றரும். ௧௧௩
மன்னர்மன் னவரையுந் தன்னடி வீழ்த்தும். ௧௧௪
அருளையு மெய்யையு மடைந்திடச் செய்யும். ௧௧௫
பொருளிலா ரின்பறம் புகழ்மெய் யிழப்பர். ௧௧௬
மடையராய்த் தம்மரு நடையெலாம் விடுவர். ௧௧௭
அடியராய்ச் சிறியரா யலக்கணுற் றுழல்வர். ௧௧௮
பசியினும் பிணியினும் பட்டுழந் தழிவர். ௧௧௯
பழியுளு நாகுளு மழியா துறைவர். ௧௨௦

௮௩-ம் அதி.—உழவு.

உழவு தொழினில விளையுளைச் செய்தல். ௮௨௧
உழவ ருயிர்க்கெலா முயிரெனத் தக்கவர். ௮௨௨
உழவுசெய் முறைநிலங் கிழவர்தாங் காண்டல். ௮௨௩
காடுநன் கழித்துக் கோடையி லுழுதல். ௮௨௪
நிலத்திற் கிசைவன விதைத்திடத் துணிதல். ௮௨௫
வித்திற் காமெரு மெத்த விடுதல். ௮௨௬
வேர்செலு மாழ மேர்செல வுழுதல், ௮௨௭
பதநன் கறிந்துநல் விதைசெல விதைத்தல். ௮௨௮
களைகட்டு நீர்பாய்ச்சிக் காத்துப் பயன்கொளல். ௮௨௯
ஒருபலன் றருநிலத் திருபல னாக்குதல். ௮௩௦

௮௪-ம் அதி.—வாணிகம்.

வாணிகம் பண்ட மாற்று நற்றொழில். ௮௩௧
அஃதெஞ் ஞான்று மாசிற் கடுத்தது. ௮௩௨
அஃதிலார்க் காசிலை யாசிலார்க் கஃதிலை. ௮௩௩
அதன்முறை யதைந்த மதிபர்தா நோக்கல். ௮௩௪
கணிதமெப் பொழுதுநா நுனிவைத் தாளுதல். ௮௩௫
கொள்ளிடங் கொடையிட முள்ளுநன் கறிதல். ௮௩௬
செலவெலாங் கூட்டிச் சிறிதேற்றி விற்றல். ௮௩௭
எவர்க்கு மொருசொலே யின்புறச் சொல்லல். ௮௩௮
கடனனி கொடுக்கு மடனனி யொழித்தல். ௮௩௯
பிறரது பொருளையுந் தமதெனப் பேணல். ௮௪௦

அரசியல்.

௮௫-ம் அதி.—கைத் தொழில்.

கைத்தொழில் பொருடரு மெய்த்தொழி லாகும். ௮௪௧
மற்றைய விரண்டையும் வளர்ப்ப தத்தொழில். ௮௪௨
அத்தொழில் பேணா ரடைகுவர் வறுமை. ௮௪௩
அத்தொழில் பல அவை யாடை நெய்தல். ௮௪௪
உணற்குஞ் செயற்கு முதவுவ செய்தல். ௮௪௫
வீடரண் முதலிய மேம்பட வியற்றல். ௮௪௬
நிலத்திற் செல்பல வலத்தே ராக்கல். ௮௪௭
நீரிற் செல்பல நாவா யாக்கல். ௮௪௮
நிலநீ ருள்ளுள பலபொரு ளெடுத்தல். ௮௪௯
காப்பிற் காம்பல கருவிக ளியற்றல். ௮௫௦

௮௬-ம் அதி.—படை.

பகையுயிர் படுத்தலாற் படையெனப் பட்டது. ௮௫௧
உலகெலா மளிப்பதோ ருத்தம வரசே. ௮௫௨
அரசரண் பொருள்களை யளிப்பது படையே. ௮௫௩
இன்பமும் புகழு மீவது படையே. ௮௫௪
மெய்யிய லடையச் செய்வதும் படையே. ௮௫௫
படையிலா ரரசரண் படுபொரு ளிழப்பர். ௮௫௬
அறம்புக ழின்பறி வருண்மெய் யிழப்பர். ௮௫௭
அடியாராய்ச் சிறைபுகுந் தலக்கணுற் றுழல்வர். ௮௫௮
பிணியொடும் பசியொடும் பிணக்குற் றழிவர். ௮௫௯
நரகமும் பழியுங் கிருகமாக் கொள்வர். ௮௬௦

அஎ-ம் அதி.—படை வகை.

படைவகை நான்கெனப் பகருவர், அவைதாம். அசுக
முன்னோர் வழிவரு மூலப் படையே. அசுஉ
நாட்டுளார் கூட்டு நாட்டுப் படையே. அசுங
காட்டுளார்க் கூட்டுங் காட்டுப் படையே. அசுச
கொடைநட் பால்வருங் கூலிப் படையே. அசுரு
நான்கிலொவ் வொன்று நால்வகைப் படும்அவை. அசுசு
நிலமிசை யமர்செயும் வலமிகு படையே. அசுஎ
நிலக்கீ ழமர்செயு நேரிலாப் படையே. அசுஅ
நீர்மிசை யமர்செயு நீர்க்கலப் படையே. அசுகூ
வானிற் றிரிதரும் விமானப் படையே. அஎ0

அஅ-ம் அதி.—படைக்கலம்.

படைக்கலம் பகைசெறப் படைகை யெடுப்பன. அஎக
படைக்கல மில்லெனிற் படையுமின் றாகும். அஎஉ
படைக்கல மீட்டல் பயப்பொரு ளீட்டலே. அஎங
பகைத்திற னெண்ணியே படைக்கல மியற்றுக. அஎச
விசையெரி கூருரம் விடமிக வியற்றுக. அஎரு
வெடிப்பன தெறிப்பன விசைமிகல் வேண்டும். அஎசு
எறிவன விடுவன வெரிமிகல் வேண்டும். அஎஎ
குத்துவ வெட்டுவ கூர்மிகல் வேண்டும். அஎஅ
உடைப்பன வறுப்பன வுரமிகல் வேண்டும். அஎகூ
படைகொலும் படைக்கலம் விடமிகல் வேண்டும். அஅ0

௮௯-ம் அதி.—படை யமைத்தல்.

பகைத்திற னழிக்கும் வகைத்தே ரியற்றுக. ௮௮௧
பகைக்குழுச் சிதைக்கும் வயக்களி றீட்டுக. ௮௮௨
குறித்த நெறிசெலுங் குதிரைகள் கொள்ளுக. ௮௮௩
இறத்தலி னின்புறாஉ மறத்தினர்க் கூட்டுக. ௮௮௪
தேர்மா பரியாள் சேனையா வகுக்க. ௮௮௫
அறைப்படுத் தேகுதற் காஞ்சில வியற்றுக. ௮௮௬
கடல்செலும் பலவகைக் கலங்களு மியற்றுக. ௮௮௭
விண்செலும் பலவகை விமானமு மியற்றுக. ௮௮௮
அவையாள் படைபடைக் கலமொடு வழங்குக. ௮௮௯
வரிசைத் தலைவரா வுரியரை யுயர்த்துக. ௮௯௦

௯௦-ம் அதி.—படை யளித்தல்.

படைதன் னுயிரெனப் பார்த்துமன் னோம்புக. ௮௯௧
தினம்படை நோக்கித் திறன்மிகுந் திடச்செயல். ௮௯௨
அவரவர் திறனறிந் தளிக்க வேதனம். ௮௯௩
படையுவப் புறச்சீர் பரிசிலும் வழங்குக. ௮௯௪
அமரிற் படுபவர் தமர்தமை யோம்புக. ௮௯௫
படைகளின் கடன்தாம் பகைகொலல் கொலப்படல். ௮௯௬
கூற்றையு மெதிர்த்திடு மாற்றலொடு செல்லல். ௮௯௭
இழைத்த திகவாஅ திறந்துபுகழ் கொள்ளல். ௮௯௮
தலைவரின் சொல்லெலா நிலையுறப் பணிதல். ௮௯௯
தலைவரைத் தமதுநற் றுயிரினும் பேணுதல். ௯௦௦

கூக-ம் அதி.—நட்பு.

நட்பெனப் படுவது பெட்புறு கேண்மை. கூ0க
அதுநன் மகாருளத் தலரு நன்மலர். கூ0உ
அதனிய லடுத்தவ ரகநக விரும்பல். கூ0௩
இடித்துக் கூற லிடுக்கண் களைதல். கூ0௪
புணர்ச்சி பழகுதல் உணர்ச்சியா னட்பாம். கூ0ரு
ஆய்ந்துநன் னட்பறிந் ததன்பின் கொள்ளுக. கூ0சு
ஆய்ந்தறி யாதுறல் சாந்துயர் தருமே. கூ0எ
மருவிப் பன்னு ளொருவா தாய்க. கூ0அ
வாய்க்கா லனைய மாந்தரை நட்டல். கூ0கூ
சூட்டுக் கோனிகர் துணைவரைக் கொள்க. கூக0

கூஉ-ம் அதி.—பழமை.

பழமையெ தனுங் கிழமைகுன் றுதது. கூகக
அஃதுயர் நட்பி னருங்கனி யாகும். கூகஉ
பழமையி னின்பம் பயப்பதொன் றில்லை. கூக௩
பழயவர் பிழைப்பினும் பழமைமா றற்க. கூக௪
அழிவந்த செய்யினு மன்பறு ராகுக. கூகரு
பழமையை மறப்போர் பாம்பினுங் கொடியர். கூகசு
அலக்கணுங் கேடு மழிவு முறுவர். கூகஎ
பழமையை விடாரைப் பாரும் விடாது. கூகஅ
பழையார்ப் பிரியாரை விழையாரும் விழைப. கூககூ
பழமையைப் புதுமையிற் பார்ப்போர் பெரியர். கூஉ0

அரசியல்.

௯௩-ம் அதி.—ஆகா நட்பு.

ஆகா நட்பிவ ணழிவுபயப் பதுவே. ௯௨௧
அவைநனி தருபவ ரறிவில் பேதையர். ௯௨௨
உறுவதே தூக்குஞ் சிறுமைமிகு மாந்தர். ௯௨௩
வினையொடு தஞ்சொல் வேறுபடு வஞ்சகர். ௯௨௪
ஒல்லுங் கருமமு முஞற்றுக் கள்ளர். ௯௨௫
மிகைபல விழைத்து நகைசெய்யும் பகைவர். ௯௨௬
பக்கத் துறைந்து பதம்பார்த் திருப்பவர். ௯௨௭
அட்டைபோ லொட்டிநின் றரியவை கவர்வோர். ௯௨௮
கள்ளுங் கவறுங் கைவிடாப் பதகர் ௯௨௯
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்டோர். ௯௩௦

௯௪-ம் அதி.—இகல்.

இகலெனப் படுவ துளமாறு பாடு. ௯௩௧
நகறரு நட்பிற் கிகன்மறு தலையாம். ௯௩௨
அதனிய லடுத்தவ ரழமனம் விரும்பல். ௯௩௩
இடருற மொழித லிடுக்கண் புரிதல். ௯௩௪
எதிருணர் வழுக்கா றிறுகுளத் தால்வரும். ௯௩௫
இகலுள மென்று மெரிந்து துன்புறும். ௯௩௬
அன்போ தட்பமோ வின்போ வுறுது. ௯௩௭
இகல்பா ராட்டுவார் தகல்காண் பரிது. ௯௩௮
அருமைச் சுற்றமு மாக்கமு மிழப்பர். ௯௩௯
கேடு மழிவுங் கிளைகளாக் கொள்வர். ௯௪௦

௯௫-ம் அதி.—பகைமை.

பகைமை யென்ப திகலது முதிர்வு. ௯௪௧
பழமையின் மறுதலை பகைமையென் றறிக. ௯௪௨
பகைமையுட் கொடியதுட் பகைமையென் றறைப. ௯௪௩
அதனினுங் கொடியதிங் கரியவை கவர்வது. ௯௪௪
பகைமையை யுட்கொள றகைமையன் றென்ப. ௯௪௫
அதைவிடா தவர்பா லியாதிவண் செய்வது. ௯௪௬
அன்புபா ராட்டி யவரை வளர்ப்பதோ. ௯௪௭
ஈகையென் றவர்கரத் தின்னுயிர் விடுப்பதோ. ௯௪௮
அறமென வெண்ணித் துறவினைக் கொள்வதோ. ௯௪௯
தம்மா ருயிரைத் தாமழித் தொழிவதோ? ௯௫0

௯௬-ம் அதி.—பகையடு நெறி.

பகைமையை விடாரைப் பகைத்தடல் வழக்குக. ௯௫௧
பகையினை யடற்குப் பலபல நெறியுள. ௯௫௨
எதற்கும் பொருளறி வின்றியமை யாதவை. ௯௫௩
ஒல்லு மிடத்தெலாம் வெல்லு மமர்நலம் ௯௫௪
ஒல்லா விடத்தினி லுபாய முறைநலம். ௯௫௫
முறையின் சொல்லே கொடைபிரிப் பழிப்பே. ௯௫௬
முன்னைய விரண்டுந் தன்னினும் வகைசெயல். ௯௫௭
பின்னைய விரண்டும் பெருந்துணை கொடுசெயல். ௯௫௮
உட்பகை யினரை யுட்பகைத் தடுக. ௯௫௯
ஒட்டிமேய் வாரை யொட்டிமேய்ந் தடுக. ௯௬0

௬௭-ம் அதி.—அமர்வகை.

அமர்வகை நான்கென வறைகுவ ரவைதாம், ௬௬௧
வெட்சியே வஞ்சியே யுழிஞையே தும்பையே. ௬௬௨
வெட்சிநல் லுயிர்களை விரோதிபாற் கவர்தல், ௬௬௩
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௪
வஞ்சிமண் ணாசைமன் னஞ்சவடல் குறித்தல்; ௬௬௫
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௬
உழிஞையரண் முற்றி யுரத்தினாற் கோடல். ௬௬௭
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௮
தும்பைமுன் வந்தமன் மைந்துதலை யழித்தல் ௬௬௯
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௭௦

௬௮-ம் அதி.—அமர்த் திட்பம்.

அமர்த்திட்ப மொருவ ரகத்திட்ப மென்ப. ௬௭௧
ஊறுறு தாற்றுக வூறுறிற் றளரேல். ௬௭௨
அமர்க்கெழும் வரையய லறியா தமைக. ௬௭௩
சொல்லுத லெளிது செய்தலோ வரிது. ௬௭௪
அமரின்மாண் டாரை யனைவருந் துதிப்பர். ௬௭௫
திண்ணியா ரெண்ணிய வெண்ணியாங் கடைவர். ௬௭௬
உளிபோல் வாருள ருருக்கண் டிகழேல். ௬௭௭
துணிந்தநல் லமரினைத் தூங்கா தாற்றுக. ௬௭௮
பெரும்பயன் றருமமர் வருந்தியுஞ் செய்க. ௬௭௯
அமர்த்திட்ப மிலாரை யாருமே வேண்டார். ௬௮௦

கூகூ-ம் அதி.—வலி யறிதல்.

தனது படையையுந் தனத்தையு மறிக. கூஅக
பகையது தனத்தையும் படையையு மறிக. கூஅஉ
தன்றுணைப் படையையுந் தனத்தையு மறிக. கூஅங
பகைத்துணை தனத்தையும் படையையு மறிக. கூஅச
இருதிறப் படைகளி னேற்றத்தாழ் வறிக. கூஅரு
இருதிறப் படைக்கல வேற்றத்தாழ் வறிக. கூஅசா
எவ்வமர் செயறனக் கெளிதென் றறிக. கூஅஎ
அதுகொளும் பொருள்படை யாதிய வறிக. கூஅஅ
அயன்மன் வரினு டளிக்குமா றறிக. கூஅகூ
அணையவு மறிந்துபி னமர்செயத் துணிக. கூகூ0

க00-ம் அதி.—கால மறிதல்.

வலிமிகு கூகையைப் பகல்வெல்லுங் காகம். கூகூக
ஆகுங் காலத் தறியவு மாகும். கூகூஉ
ஆகாக் காலத் தெளியவு மாகா. கூகூங
தனக்காங் காலஞ் சார்ந்தமர் தொடங்குக. கூகூச
பகைகெடுங் காலம் பார்த்தமர் தொடங்குக. கூகூரு
பருவம் வரும்வரை பகைவர்க் கடங்குக. கூகூசா
பருவம் வரினுடன் பகைவரை யடக்குக. கூகூஎ
கூம்பும் பொழுது கொக்கொத் தமர்க. கூகூஅ
அடர்க்கும் பருவத் ததுபோற் குத்துக. கூகூகூ
காலமறிந் தேசெயின் ஞாலமுட னெய்தும். க000

கOக-ம் அதி.—இட னறிதல்.

நெடும்புன லுண் முதலையா லடுங்களி று படுமே. கOOக
முதனிலத் தெறும்பான் முதலையும் படுமே. கOOஉ
கால்வ னெடுந்தேர் கடலோ டாதே. கOOந
நிலமிசை நாவாய் நின்றோ டாதே. கOOச
முரண்சேர்ந் தவர்க்கு மரண்சேர்த னன்று. கOOரு
மேவிருந் தமர்செயல் வெல்வோர்க்கு நன்று. கOOசு
பெருமலை யரணுள பேடியும் வெல்லும். கOOஎ
சிறுபகை தன்னிடத் துறுபகை யழியும். கOOஅ
தெரியா விடத்துப் பெரியாரு மழிவர். கOOகூ
இடங்கண் டல்லது தொடங்கிடே லமரே. கOகO

கOஉ-ம் அதி.—அமர் துணிதல்.

ஒருமா னிடவுயிர்க் குலகெலா மாற்று. கOகக
பலமா னிடர்தாம் படுமமர் நன்றோ? கOகஉ
படுமா னிடரிற் பலருயி னன்றும். கOகந
இவ்வொன் றலாலமர்க் கேதுபிறி தில்லை. கOகச
ஆன்றோ ரிதனையே யமர்க்கேது வென்ப. கOகரு
அளிக்கப் படுவன வழிவென வெண்ணுக கOகசு
அளிக்கப் படுவன வதிகமேற் றுணிக. கOகஎ
பொருள்படை யமர்த்திறன் பொழுதிட னெண்ணுக.
அவைபகை யிற்றனக் கதிகமேற் றுணிக. கOககூ
அன்றே லுலகெலா மழியினும் விடுக. கOஉO

கoகூ-ம் அதி.—தூது விடல்.

தூதொரு வர்க்குச் சொலச்சொலுஞ் சொல்லே. கoஉக
எதிரியை யிணைத்தற் கெண்ணிய சொல்லே. கoஉஉ
அறவா சமர்முன ரதுவிடல் வழக்கே. கoஉகூ
அமையு மிடத்தெலா மதுவிடல் கடனே. கoஉச
அறியாப் பகைக்கறி வளித்தலுங் கடனே. கoஉரு
தூதுரைப் பாரிய ராய்மையே வாய்மையே. கoஉசு
அன்பே துணிவே யழகே யாற்றலே. கoஉஎ
நூலெலா மறந்துள நுண்ணறி வுடைமையே. கoஉஅ
அமையமும் பிறவு மறிந்துசொலுந் திறனே. கoஉகூ
அமைச்சா சியலெலா மமைந்துள தன்மையே. கoகூo

கoசு-ம் அதி.—அமர் செய்தல்.

தூதினுந் தெருளாத் தீயரை யடன்முறை. கoகூக
அவரை யறவடா தவர்தீ தடறலே. கoகூஉ
அரும்படை பெருக்கி யவரஞ் சச்செயல். கoகூகூ
அறியா நெறியா லவரைச் சிறைகொளல். கoகூச
அவரய லமர்செயு மமையத் தாண்கொளல். கoகூரு
அவரது பகைகொண் டவர்மற வலியடல். கoகூசு
அவரிற் சிலர்கொண் டவர்மற வலியடல். கoகூஎ
அவரிற் சிலர்பிரித் தவர்மற வலியடல். கoகூஅ
அமையு மமர்செய் தவர்மற வலியடல். கoகூகூ
அளவுக் கதிக மடுவது தீது. கoசo

கo௫-ம் அதி.—வெற்றியடைதல்.

வெற்றிதன் பொருளை மீட்டர சாளுதல். கoசக
பகைமறம் விடவும் யணியவுஞ் செய்தல். கoசஉ
பகையவை செயும் வரை பக்கநாட் டமர்த்தல். கoசங
பகைமற வலிகெடும் வகையெலாந் திருத்தல். கoசச
அறஞ்செயு மாறதற் கதனு டீதல். கoச௫
வேரொடும் பகையடல் வெற்றியென் றறைப. கoசசா
அஃதரும் பெருமற மாமென் றறிக. கoசஎ
அமர்பகை யெச்ச மனலதா மென்ப. கoசஅ
அனலற வொழிப்பவ ரியாங்கணு முளரோ? கoசகூ
அடாஅ வகையதை யடக்கிவைத் தாளுக. கo௫o

கoகூ-ம் அதி.—அரசு கோள்ளல்.

அரசினைத் தருதற் கருகரந் தணரே. கo௫க
அருளறி வமைந்துள வறவோ ரந்தணர். கo௫உ
அவரிலை யெனிற்றரற் கருக ரரசரே. கo௫ங
மறத்தினைச் சிதைக்குந் திறத்தின ரரசர். கo௫ச
அவரிலை யெனிற்றரற் கருகர் வணிகர். கo௫௫
பொருள்வே ளாண்மை புரிபவர் வணிகர். கo௫சா
அவரிலை யெனிற்றரற் கருகர் பிறரே. கo௫எ
பிறர்பிற தொழிலெல்லாம் பேணியிங் காள்பவர். கo௫அ
அனைவருந் தரக்கொள லதிகரன் றென்ப. கo௫கூ
அறஞ்செயத் தானர சாதலும் வழக்கே. கoசாo

௧௦௭-ம் அதி.—குடி புரத்தல்.

குடியெலா மகவெனக் கொண்டுமன் னோம்புக. ௧௦௬௧
அவர்க ளியாவரு மறிவுறச் செய்க. ௧௦௬௨
அரியகைத் தொழில்சில வறிந்திடச் செய்க. ௧௦௬௩
படைக்கலப் பயிற்சியிற் பாடுறச் செய்க. ௧௦௬௪
பொருளைக் குடியின் பொதுவெனப் பெருக்குக. ௧௦௬௫
குடிபொருள் செய்தற் கடிமுதல் வழங்குக. ௧௦௬௬
குடியில் வாழ்ந்திடக் குறைந்தன வழங்குக. ௧௦௬௭
குடிசெயூ தியத்துட் குடியினர் வாழ்க. ௧௦௬௮
பொன்றுநாண் மிஞ்சிய பொதுப்பொரு ளொடுகொளல்.
குடிபசித் துழலன்மன் குற்றமென் றறிக. ௧௦௭௦

௧௦௮-ம் அதி.—இறை கோள்ளல்.

இறைகுடி யூதியத் திறைகொளு மளவே. ௧௦௭௧
அஃதறு பங்கிலொன் றாமென மொழிப. ௧௦௭௨
இறையிலா ரொன்றனு ளிறையினர் வாழ்க. ௧௦௭௩
ஒன்றிறை கொளநடு வுதவிட வழங்குக. ௧௦௭௪
ஒன்றினுட் டகம்புற மோம்பலை நடாத்துக. ௧௦௭௫
ஒன்றினார் நிலநல முயர்ந்திடச் செய்க. ௧௦௭௬
ஒன்றினே கல்வியோ டியாறு மாற்றுக. ௧௦௭௭
மிஞ்சுவ பொதுவொடு வேந்துவைத் தோம்புக. ௧௦௭௮
புவிநலங் குன்றிற் பொதுப்பொருள் வழங்குக. ௧௦௭௯
மறமன் னிலங்கொளத் திறஞ்செய வழங்குக. ௧௦௮௦

அரசியல்.

க0கூ-ம் அதி.—முறை செய்தல்.

குடியது குற்றமன் கடிவது முறையாம். க0அக
கடியு மியலதன் காரணம் போக்கல். க0அஉ
காரணம் போம்வரை காப்பினுள் வைத்தல். க0அங
எதற்குமோர் வகையறி விலாமையே காரணம். க0அச
செய்ததைச் செய்ய விடாமையே காப்பு. க0அரு
இவையே பறமுறை நவையே பிறவெலாம். க0அசா
முறைகண் ணோடா துயிர்வெளவ லென்ப. க0அஎ
அம்முறை பழிவுறு மரசுசெய் மறமுறை. க0அஅ
களையறி யாமை நிலங்குடி யொக்கும். க0அகூ
களையோ களையுடை நிலமோ களைவது. க0கூ0

கக0-ம் அதி.—அறம் புரிதல்.

அறமன் னுயிர்த்துய ரறுக்கு நல்வினை. க0கூக
அவ்வினை யுயிர்தொறும் வெவ்வே றாகும். க0கூஉ
அவையுடன் கண்டுநன் காற்றுதன் மன்கடன். க0கூங
துயர்முஃக னுயிர்க்கெலாந் துப்புர விலாமை. க0கூச
அதனத னிடத்ததை யமர்த்திவை யாமை. க0கூரு
ஆறறி வினர்க்குநல் லறிவில்லாமை. க0கூசா
உயிரெலா மதனத னுணவுற வோம்புக. க0கூஎ
அதனத னெல்லையு ளமர்த்திவைத் தாளுக. க0கூஅ
ஆறறி வினர்க்குநல் லறிவெலாம் வழங்குக. க0கூகூ
அறவிரி திருக்குற ளாதியா லறிக. கக00

அரசியல் முற்றிற்று.

மெய்யறம்

அந்தணரியல்.

௧௧௧-ம் அதி.—அந்தண ரியல்பு.

அந்தண ரறத்தொடு செந்தண்மை பூண்டவர். ௧௧௦௧
மாணவர் தம்மையே வளர்க்கு மியல்பினர். ௧௧௦௨
அடுத்தவர் தம்மையு மளிப்பவரில் வாழ்வார். ௧௧௦௩
அரசர்நல் லுயிரெலா மளிக்குந் திறத்தினர். ௧௧௦௪
அனைத்துயிர் தம்மையு மளிப்பவ ரந்தணர். ௧௧௦௫
முதன்முந் நிலையினர் முகைமலர் காயனர். ௧௧௦௬
அந்தணர் மெய்ந்நிலை யடைந்தவர் கனிவிதை. ௧௧௦௭
விதையே மரமிலை மென்முகை யாதியாம். ௧௧௦௮
மெய்யே யுலகுயி ரைந்நிலை யினராம். ௧௧௦௯
முறைமுகை விதையா முதனிலை யுயிர்மெயாம். ௧௧௧௦

௧௧௨-ம்—அதி. அந்தண ரோழுக்கம்.

ஓதலி னந்தணர்க் கொழுக்கநன் றென்ப. ௧௧௧௧
அந்தணர்க் கொழுக்க மனற்குச் சூடுபோன்ம். ௧௧௧௨
ஒழுக்கமு மறிவு முடனிகழ் தகைமைய. ௧௧௧௩
ஒன்றின் றெனின்மற் றதுவு மிலதாம். ௧௧௧௪
ஞானச் சொல்லெலாங் கானற் சலமாம். ௧௧௧௫
ஒழுக்க மறிதற் குரைகலின் றென்ப. ௧௧௧௬
பகுத்தறி வறனா லுகுத்தவ ரேயவர். ௧௧௧௭
ஒழுக்கமெவ் வுயிர்க்கு மூறுசெய் யாமை. ௧௧௧௮
இயலு நன்றெலா மிடைவிடா தியற்றல். ௧௧௧௯
இழுக்கமிவ் விரண்டிலொன் றியற்றத் தவறல். ௧௧௨௦

ககங-ம்அதி.—கூடா வொழுக்கம்.

சாமிக ளுட்பலர் காமிக ளாயினர். ககஉக
தேசிக ருட்பல ராசின ராயினர். ககஉஉ
மகந்துக ளுட்பல ரிகந்தன ரொழுக்கம். ககஉங
தம்பிரான் மறமெலா மெம்பிரா னறிவர். ககஉச
போலியந் தணர்பலர் புரியா மறமிலை. ககஉரு
அரசரு ளுளர்மறங் காவினி லாள்பவர். ககஉசு
இல்வாழ் வினருளும் புல்வாழ் வினருளர். ககஉஎ
மாணவ ருளுமுளர் கோணல் கொண்டவர். ககஉஅ
உலக மென்றுநல் லொழுக்கங் கொள்ளும்? ககஉகூ
உள்ளும் புறமு மோரியல் பூணும்? ககங0

ககச-ம் அதி.—மானங் காத்தல்.

மானமென் பதுதம் மதிப்பை விடாமை. ககஙக
தத்தந் நிலைக்குத் தாழ்ந்தசெய் யாமை. ககஙஉ
தத்த மியற்குத் தக்கவா றொழுகல். ககஙங
மானொரு மயிரற மாயுமவ் விடத்தே. ககஙச
மனிதர்தம் மதிப்பற வாழ்ந்திடல் வியப்பே. ககஙரு
மாணவ ரிழுக்கலின் மனித னன்றே. ககஙசு
இல்லின ரிவறலி னிறத்த னன்றே. ககஙஎ
அரசறஞ் செயாமையி னழித னன்றே. ககஙஅ
தாழ்ந்தார்த் தெறுதலிற் சாத னன்றே. ககஙகூ
அந்தணர் வெகுளலி னழற்புக னன்றே. ககச0

௧௧௫-ம் அதி.—வெஃகாமை.

வெஃகுதல் பிறர்பொருள் விரும்புங் குற்றம். ௧௧௪௧
வெஃகலை மறத்தின் வித்தென மொழிப. ௧௧௪௨
அதுதீ யவாவி னங்குர மாகும். ௧௧௪௩
காமமுங் களவுங் கலிதழை யிலைவிடும். ௧௧௪௪
கொலையும் பொய்யுமாங் கொம்பொடு கிளைவிடும். ௧௧௪௫
அழிதரு மறங்களா மரும்பொடு மலர்விடும். ௧௧௪௬
பழியுங் கேடுமா மழியாக் காய்தரும். ௧௧௪௭
அழிபல நிரயக் கழிபெருங் கனிதரும். ௧௧௪௮
பொறிவழித் துன்பமாஞ் செறிபல சுவையாம். ௧௧௪௯
ஆதலால் வெஃகலை யறவே விடுக. ௧௧௫௦

௧௧௬-ம் அதி.—வெகுளாமை.

வெகுளி யகத்தெழும் வெங்கனற் சுடரே. ௧௧௫௧
இச்சுடர் தம்மையு மினத்தையு மழிக்கும். ௧௧௫௨
நகையை யுவகையைத் தகையைக் கொல்லும். ௧௧௫௩
பகையைச் சொல்லரும் வகையில் வளர்க்கும். ௧௧௫௪
மிகையுந் துயரு மிகுந்திடச் செய்யும். ௧௧௫௫
வெகுளியை விடற்கவ் விருப்பமுட் கொள்ளுக. ௧௧௫௬
வெகுளியுள் ளெழுங்கா னகுதலே புரிக. ௧௧௫௭
வெகுளியின் கேடெலாம் விரைந்துட னெண்ணுக. ௧௧௫௮
ஆடிகொண் டடன்முக வழகினை நோக்குக. ௧௧௫௯
வெகுளியை யடுதலே தகுதியென் றடுக. ௧௧௬௦

௧௧௭-ம் அதி.—இன்னா செய்யாமை.

மன்னுயி ருளமுடல் வருத்துவ வின்னா. ௧௧௬௧
அவைதீச் செயலே யச்சொலே நினைப்பே. ௧௧௬௨
கொடியது செயலுட் கொலையென மொழிப. ௧௧௬௩
கொலையினு மிந்தியங் களைவது கொடியது. ௧௧௬௪
அவைகெட வதைசெய லதனினுங் கொடியது. ௧௧௬௫
கொடியவை சொல்லுட் குறளைபொய் நிந்தை. ௧௧௬௬
கொடியவை நினைப்புட் கொலைமுக னினைப்பு. ௧௧௬௭
இன்னா செய்தார்க் கின்னா வந்துறும். ௧௧௬௮
ஒன்றொரு கோடியாய்ப் பின்றைநாள் வந்துறும். ௧௧௬௯
உற்றவுயி ரறிவள வுறுத்தும் நிற்கும். ௧௧௭0

௧௧௮-ம் அதி.—தவஞ் செய்தல்.

தவமென் பதுதனைச் சார்ந்தநோய் பொறுத்தல். ௧௧௭௧
உணர்வுடை யுயிர்கட் கூறுசெய் யாமை. ௧௧௭௨
கைந்நிலை விடாது மெய்நிலை யுள்ளல். ௧௧௭௩
மனத்தை யடக்கி வசஞ்செய முயறல். ௧௧௭௪
அதற்கின்றி யமையா வப்பியா சங்கள். ௧௧௭௫
தவஞ்செய லொன்றே தஞ்செய லென்ப. ௧௧௭௬
தவத்தி னளவே தனமுறு மென்ப. ௧௧௭௭
தவமுடித் தாரே சமனைக் கடப்பர். ௧௪௭௮
தவமே யிகபரந் தருநன் முயற்சி. ௧௧௭௯
தவமே யியற்றுக தகவுற வேண்டுவோர். ௧௧௮0

கககூ-ம் அதி.—துற வடைதல்.

துறவியா னெனவெனு முறவினை யொழித்தல். ககஅக
மன்னுயி ரெல்லாந் தன்னுயி ரென்றல். ககஅஉ
தன்பொருண் மன்னுயிர் தமவென வாழல். ககஅ௩
துறவென விவ்வகத் துறவையே மொழிப. ககஅச
புறத்துற வெல்லாம் பொய்த்துற வாமே. ககஅரு
துறவந் தணருக் குறவொழுக் கன்றோ? ககஅகூ
தாய்தந் தையரைத் தள்ளலுந் தண்மையோ? ககஅஎ
தன்னுயிர்த் துணையைத் தவிர்தலுந் தண்மையோ? ககஅஅ
தீயவா மிவையெலாம் பேயா டுறவே. ககஅகூ
தமரையே யளியார் பிறவுயி ரளிப்பரோ? கககூ0

க௨0-ம் அதி.—அருள் புரிதல்.

அருள்பல வுயிர்க்கு மன்புபா ராட்டல். கககூக
உயிரெலா மெய்யது பயிரெனக் காண்க. கககூஉ
எவ்வகை யுயிர்க்கு மின்னா செயற்க. கககூ௩
அவற்றிற் காவன வனைத்து முதவுக. கககூச
தமைபவை வருத்தினு மவைதமை யோம்புக. கககூரு
அருளுடை யார்மெய்ப் பொருளடை வதுதிடம். கககூகூ
அருள்பே றருள மருண்மிகு முண்மை. கககூஎ
சுயநயச் செயலரு ளினையற வோட்டும். கககூஅ
பரநயச் செயலருள் பரவிடச் செய்யும். கககூகூ
அருள்விடா தவரைமெய்ப் பொருள்விடா துண்மை. க௨00

அந்தண ரியல் முற்றிற்று.

மெய்யியல்.

௧௨௧-ம் அதி.—மேய் யுண்மை.

உயர்கரி சுருதி யுத்தி யநுபவம். ௧௨௦௧
தூயர் பகருரை சுருதி யென்ப. ௧௨௦௨
பலமதத் தூயரும் பகர்ந்துள ருண்மை. ௧௨௦௩
எது சிலகொண் டோதுவ துத்தி. ௧௨௦௪
ஆத னிலவ லழித லிவனுள. ௧௨௦௫
அவைசெயக் கர்த்தா வவசிய மென்க. ௧௨௦௬
அறிந்துள் ளுணர்தலே யநுபவ மென்ப. ௧௨௦௭
இடருறும் போழ்துமெய் யெண்ணுகின் றனர்பலர். ௧௨௦௮
பாவஞ் செயவுளம் பதைப்ப தநுபவம். ௧௨௦௯
அரசரு மாளப் படுவ தறிகிறோம். ௧௨௧௦

௧௨௨-ம் அதி.—மேய்யின் அடக்கநிலே.

அடக்க நிலேமெய் யடங்கிய வறிவு. ௧௨௧௧
அண்டப் பொருளெலா மணுக்களின் சேர்க்கை. ௧௨௧௨
வலியிலா தணுக்கண் மருவிநிற் கும்மோ? ௧௨௧௩
அண்டஞ் சுற்றலு மதுகொண் டன்றோ? ௧௨௧௪
ஆதலா லெங்கணு மஃதனமந் துளதே. ௧௨௧௫
அகில நிகழுமா றுள்வ தறிவு. ௧௨௧௬
அன்றே லொழுங்கா வவைகண நிகழுமோ? ௧௨௧௭
ஆதலா லெங்கணு மறிவமைந் துளதே. ௧௨௧௮
நிறைபொரு ளிரண்டு நிலவா வென்ப. ௧௨௧௯
ஆதலால் வலியு மறிவு மொரேபொருள். ௧௨௨௦

மெய்யறம்

௧௨௩-ம் அதி.—மெய்யின் விளக்கநிலை.

விளக்க நிலைமெய் விளங்கு மறிவு. ௧௨௨௧
அடக்கமெய் விறகு ளடங்கிய தீப்போன்ம். ௧௨௨௨
விளக்கமெய் கடைய விறகெழுந் தீப்போன்ம். ௧௨௨௩
ஐயறி வுயிர்களின் மெய்யொளி யடங்கும். ௧௨௨௪
ஆறறி வினரு ளவ்வொளி விளங்கும். ௧௨௨௫
அவர்மறஞ் செயச்செய வதனொளி குன்றும். ௧௨௨௬
அவரறஞ் செயச்செய வதனொளி பெருகும். ௧௨௨௭
அவரொழுக் கறிந்தபோழ் தஃதக விளக்காம். ௧௨௨௮
அவரொழுக் கடைந்தபோழ் ததுமலை விளக்காம். ௧௨௨௯
ஒழுக்கில்வாய் ஞானமஃ தொழிக்குங் காற்றும். ௧௨௩௦

௧௨௪-ம் அதி.—மெய் யுணர்தல்.

ஒழுக்க முடையா ருணர்வர் மெய்யை. ௧௨௩௧
அறநூ லெண்ணில வறைந்துள வொழுக்கம். ௧௨௩௨
அவற்றைவிட் டயலுற றவற்றைப் புரிதலாம். ௧௨௩௩
அடிவிட் டேணியி னந்தமே றுவரோ. ௧௨௩௪
அறநூல் கற்றுநின் றுன்மநூ லாய்க. ௧௨௩௫
ஒருட லளவி லுறுமறி வான்மா. ௧௨௩௬
அணையுள குளநீர்க் கான்மா விணையாம். ௧௨௩௭
ஆன்மா மெய்யொன் றுணவம் வேற்றுமை. ௧௨௩௮
நெஞ்சே ரொழுக்கா லாணவங் களைக. ௧௨௩௯
இலகுமெய் யுண்மை யுலகுமெய்த் தோற்றம். ௧௨௪௦

மெய்யியல்.

௧௨௫-ம் அதி.—மெய்ந்நிலை அடைதல்.

உயரியல் விடமெய் யியலுறு முடனே. ௧௨௪௧
விடலே வீடது மெய்யறஞ் செயினும். ௧௨௪௨
மெய்யற மாந்தர் மிகைவிட வுதவல். ௧௨௪௩
ஒழுக்க வுயிர்மெய் யுணர்ந்திட வுதவல். ௧௨௪௪
உலகி லுயிர்க ணிலவுற வுதவல். ௧௨௪௫
இவ்வற மரசர்க் கியற்றுத லெளிது. ௧௨௪௬
அறிவ ரரச ராகுத லரிதோ? ௧௨௪௭
அரசனா யாள்வ தமைச்சறி வன்றோ? ௧௨௪௮
அறிந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க. ௧௨௪௯
அருள்கொடு மெய்யற மாற்றிமெய் யடைக. ௧௨௫௦

மெய்யியல் முற்றிற்று.

மெய்யறம் முற்றுப்பெற்றது.

மெய்யறம்

அரும்பதவுரை.

சூத்திரம். பதம். உரை.

சிறப்புப்பாயிரம்.

க வையம்ஓர் - உலகம்அறிந்த.
௪ நுதலியது - (இந்நூல் கூறக்) கருதியது.
அ ஆன்ற - (கல்விகேள்விகளால்) நிறைந்த.
அ மாதேவன் - வித்வான் மகாதேவ முதலியார்.

பாயிரம்.

௩ கற்றுரைத் தாற்றுவோன் - (தான்) கற்று (ப் பிறர்க்கு) உரைத்து (அறத்தை)ச் செய்வோன்.
௪ நுவல்திறன் - சொல்லும் முறை.
௫ மெய் - கடவுள்.
அ புரிந்தனன் - இயற்றினேன்.

நூல்.

க மாண் - சிறப்பு.
௪ வரைநிலை - நீக்கப்படுதல்.
௬ கடன் - கடமை.
,, நன்று - அறம்.
௫ ஆதி - கடவுள்.
கக உறும் - பொருந்தும்.
க௪ சேருவ - பொருந்துவன.
க௫ நணுகுவ - பொருந்துவன.

சூத்திரம். பதம். உரை.

க௬ மடன் - மடமை.
,, மடி - சோம்பல்.
கஎ நவிலும் - சொல்லும்.
உ௬ ஆம்துணை-இயையும்உதவி.
உ௬ அமைந்து - அடங்கி.
௩0 இயைந்தவர் - பொருந்தியவர்.
௩௩ செறிவாய் - இடையீடில்லாமல்.
௩௪ பகுத்தறியுயிர்-மனிதர்.
௩௬ உள்ளல் - நினைத்தல்.
௩எ உள்ளியாங்கு - நினைத்த வண்ணம்.
௩௮ நடுவு - நீதி.
,, ஓர்ந்து - அறிந்து.
௪0 நிலை - தன்மை.
௪க தொடர்பு - சேர்க்கை.
௪உ சிதைக்கும் - கொல்லும், வருத்தும்.
௪௩ வவ்வும் - கவரும்.
,, மாக்கள் - இழிமக்கள்.
௪௪ துணைவர்-உயிர்த்துணைவர்.
,, மாஇனத்தார்-மிருகக் கூட்டத்தினர்.
௪௬ புரைவளர் - குற்றத்தை வளர்க்கும்.
௪எ கயவர் - கீழ்மக்கள்.
௪அ பசு - உயிர்; ஜீவன்.

அரும்பதவுரை.

சஅ பதி - இறை; சிவன்.
ருரு மன்னி - பொருந்தி.
சுஉ இருபாலாரும் - ஆடவரும் மகளிரும்.
சுரு அறிதிறன்-உணரும்வலிமை.
சுஎ மகார் - மக்கள்.
சுஅ செறிந்திட - உள்ளத்தில் அமைய.
சுகூ வல்லுநர் - வல்லவர்.
எக தலைப்படும்-முதன்மையுறும்.
எங தொகுதி - கூட்டம்.
எச அறிவுஉரன்-அறிவின்சக்தி.
எசு தனு - கருவி.
எஎ மெய்முதலிய-ஐம்பொறிகள்.
அ0 உய்ப்பது - செலுத்துவது.
அக முத்தொழில் — ஆக்கல், அளித்தல், அழித்தல்.
,, அறன் - புண்ணியம்.
,, மறன் - பாவம்.
கூ0 எணும் - எண்ணும் - நினைக்கும்.
கூச உரன் - வலிமை.
,, வரன் - கணவன்.
கூசு வளி - வாதம்.
,, அனல் - பித்தம்.
,, நீர் - சிலேத்துமம்.
கூஎ மறுத்து - குறைத்து.
கூஅ சிலம்பம் - சிலம்பவரிசை.
கூஅமெய்ப்பயிற்சி-தேகாப்பியாசம்
க00 விளைந்திட-வேலைசெய்ய.
க0க நிலை - உடல்.
க0ரு படும் - இறக்கும்.
க0அ தொழுநோய்-பெருவியாதி.
க0அ அழும்நோய் - கண்ணீர் பெருகச்செய்யும் பிணி.
கக0 கூற்றம் - எமன்.
ககக அரித்த - தின்ற.
ககச அரி - சிங்கம். [சம்.
ககஎ மக்களுள் - மனிதமாமி
,, மறி - ஆடு.
ககஅ பொறி-மெய்,வாய், கண் மூக்கு, செவி.
கஙஅ கவறு-சூதாடுகருவி.
கச0 கவறுஉருள்களம் - சூதாடும் இடம்.
கசங ஏற்றம்-உயர்வு.
கசச பரந்து-பல இடங்களுக்குச்சென்று இரந்து.
கருஅ வழங்கும்-கொடுக்கும்.
கசுக நிகழாதது-நடக்காதது.
,, நிகழ்த்துதல்-சொல்லுதல்.
கசுசு வாயில் - வழிகள்.
கஎ0 ஒரீஇயவர்-நீக்கியவர்.
கஎச பொருநகை - அமர் செய்யும் விரோதிகள்.
கஎஅ புன்மை - இழிவு.
கஎகூ பொன்றல் - இறத்தல்.
கஅ0 அடி - வேர்.
கஅஅ நயன் - இன்பம்.
கஅகூ பதடி - மனிதப்பதர்.
ககூஉ இழுக்காறு-குற்றநெறி.
ககூசு சிறுமை - துன்பம்.
ககூஎ கீழ் - கீழ்மக்கள்.
,, வழுக்காறு - வழுக்குகின்ற நெறி.
ககூஅ இலங்குதல்-நிலவுதல்.
உ0அ தாய்மொழி-சுயபாஷை.
உகக மெய்யுறுப்பு-சரீர அவயவம்.
உகஎ நடை - ஒழுங்கு.

உகக உரு - வேடம்.
உஉஉ அமைவுற - பொருந்த.
உநச உற்றுழி - துன்பம் உற்ற இடத்து.
உநக மிகை - குற்றம்.
உசக நடுவுள்-அளவுள்; எல்லையுள்.
உசந நடுவு - நடுவுநிலைமை.
உசுஅ இகந்தார் - நீங்கியவர்.
உருக புலம் - விஷயம் - ஸப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம்.
உசுரு ஒன்றாக்கல் - ஒத்திருக்கச் செய்தல்.
உஎக ஓரீஇ - விலக்கி.
உஎஉ அற்றம்-இறுதி; அழிவு.
உஎஉ ஆவன - நன்மை பயக்கும் வினைகள்.
உஎஎ எளியவா - கேட்போர் அறியத்தக்க சொற்களாக.
,, செல - கேட்போர் உள்ளத்தில் புகும்படி.
,, அரியவை - (பிறர்சொல்லும்) எளிதில் அறியமுடியாத சொற்களை.
உஅ0 எதிரதா - வருமுன்னர்.
உஅரு உயிர்க்கும் - சுவாசமிடும்.
உஅகூ ஊறு-இடையூறு. [தோற்க.
உகூந முதுகிட - முதுகுகாட்ட -
உகூஎ ஆற்றின் - வழியில்.
உகூஅ கொடு - கொண்டு. [னும்.
உகூகூ தாழ்ப்பினும் - தாமதப்படி
ந00 விரி - விரிவு.
ந0உ எதிர்பால் - ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும்.
ந0ச வேளாண்மை - பரோபகாரம்.
ந0சு இல்நிலை-கிருக ஆசிரமம்.
நகஉ எதிர் எதிர் வழி - (ஒன்றற்கொன்று) எதிராகஇருக்கும் இரண்டு வழிகள்.
நகந மட்டம்-மேலளவு.
நகச சதுரம் - நீளமும் அகலமும் பெருக்கக் கண்ட தொகை.
நகரு மேல் - மேலுள்ள.
நகசு வளி - காற்று.
,, அனல் - தீ.
,, நீர் - வெள்ளம்.
,, மா - மிருகம்.
நகஎ ஒளி-சூரிய வெளிச்சம்.
நகஅ பகுத்திடல்-பிரித்திடுக.
நககூ நிலஅறை-நிலக்கீழ்அறை.
,, மேல் - மேல் வீடு.
நஉ0 தரு - மரம்.
நஉஅ குடிமை-நற்குடிப்பிறப்பு.
,, தூய்மை-மனசுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தம்.
நஉகூ பருவம் - வயது.
நந0 வரவு-வரும்பொருள்.
நநகூ இயற்றுவ - செய்யுங்கருமங்கள்.
நசஉ அகப்பொருள்-அகப்பொருள் நூல்.
நசஎ நிமித்தம் - காரணம்.
நரு0 மெய்யிணைதல்- கடவுளை அடைதல்.
நருகூ அடும் - கொல்லும்.
நசுசு அவனியில்-உலகத்தில்.
நஎக துணை - மனைவி.

அரும்பதவுரை.

ருஎரு முழுமகன் - அறிவிலி.
ருஎஎ நிறை - கற்பு.
ருகூஉ பொறி - ஐம்பொறிகள்.
ருகூரு இகம் - உலகம்.
,, பரம் - கடவுள்.
சூ00 பிழையாது - தவறாது.
சூ0க ஏதம்-குற்றம்; நஷ்டம்.
,, ஊதியம்-குணம்; இலாபம்,
சூ0உ காதன்மை - காதலிக்கும் தன்மை.
சூ0சு புனை - தளை - விலங்கு.
சூ0அ களித்தற்று - கள்குடித்தது போலும்.
சூ0கூ அவை - சபை.
சூகஉ ஒண்மை - அறிவு.
சூகரு இவறல்-உலோபம்செய்தல்.
சூககூ மறை - இரகசியம்.
,, மிறை - துன்பம்.
சூகஎ இழுக்கல் - தவறுதல்.
சூஉடு படுபொருள்-வளர்பொருள்.
சூஉகூ உறுவது - வரும்வேலை.
சூருரு இறவு - குற்றம்.
சூசூரு ஒன்னார் - பகைவர்.
சூசூஎ சோலைநீர் - சோலையிலுள்ள ஊற்றுநீர்.
சூசூஅ இளம்பகல் - பகல் பத்து நாழிகை.
சூசூகூ யாமம் - இரவில் நடுப்பத்து நாழிகை.
சூடுக அயர்வு - களைப்பு.
சூடுரு சுழுத்தி - கனவற்ற கடும் உறக்கம்.
சூடுகூ மெய்த்தொழில் - உடலுறுப்புகளாற் செய்யப்படும் தொழில்.

சூசுஉ அங்குரம் - முளை.
சூசுசு மெய்த்திறம் - உண்மையான வலி.
சூசுஎ தாழ்த்தியே-குறைத்தே.
சூசுஅ இறந்து-அளவுகடந்து.
,, படுவர்-அழிவர்.
சூஎ0 ஈட்டுவர்-சேகரிப்பர்.
சூஎகூ எச்சம் - புகழ்.
சூஅ0 நிச்சலும் - தினமும்.
சூஅஉ நகின் - சிரித்தால்.
சூகூரு அரில் - குற்றம்.
டு00 செற்று - கோபித்து.
டு0அ பயிற்றல் - பழக்கல்.
டு0கூ அழுக்கு - மாசு; பொறாமை.
டுகசூ தகையர் - தகுதியுடையவர்.
டுககூ பற்றலர் - பகைவர்.
டுஉசூ மருந்து - அமிழ்தம்.
டுஉடு காப்பு-பாதரட்சை முதலியன.
டுருப செல்வுழி-போகும் பொழுது.
டுரு0 உள்ளிட-(பிரிவை நினைந்து) வருந்த.
டுருக துஞ்சிய - இறந்த.
டுடுஉ ஆர்வலர்-அன்பு செய்யப்பட்டவர்.
டுடுரு தவல் - கெடுதல்.
டுசுஅ ஒறுத்தார் - பதில் தீங்கு செய்தார்.
டுஎஉ முதல் - வேர்.
டுஎடு அறவோர் - அறம்புரிவோர்.
டுஎகூ துவ்வார் - வறிஞர்.

௫௭௮ நன்மை - சுபகாரியம்.
,, தீமை - அசுபகாரியம்.
௫௮௦ ஆணை - கட்டளை.
௬௦௪ சூழ்ச்சி - அறிஞரோடெண்ணுதல்.
௬௦௬ உரை - புகழ்.
௬௨௦ உணர்ச்சி - ஒருமைப்பட்ட உணர்வு.
௬௨௩ உற்றன - பொருந்தியன.
௬௪௦ சீர் - பொருத்தம்.
௬௪௨ செம்மை - நடுவுநிலைமை.
௬௪௬ தவாவினை - கெடாவினை (அறம்).
௬௪௭ பொது-கணிதமும் பாஷையும்.
,, சிறப்பு - மற்றையன (பொருள் முதலியன).
௬௬௧ வினைஞர்-வினைசெய்வோர்.
௬௬௨ கடாஅ-(பார்த்தோர்) ஐயப்படாத.
௬௬௩ சிதைப்பினும் - வதைப்பினும்.
,, உகாமை - வெளிவிடாமை.
௬௬௬ கொற்றம் - செல்வம்.
௬௬௯ அயிராது - சந்தேகியாது.
௬௭௪ புணர்வு-இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை.
,, ஒழிவு - வீடு.
௬௮௨ அமைத்து - முடித்து; செய்து.
௬௮௯ பட்டி - விக்கிரமாதித்தனது மந்திரி.
௬௯௦ விக்கிரமன் - விக்கிரமாதித்[தன்
௬௯௫ ஒல்லும் - பொருந்தும்.
௭௦௧ பாடு - பெருமை.
௭௦௮ உள்உட்க-உள்ளம்நடுங்க.
,, மேல்நகை-வெளியில்மாத்ரம் சிரித்தல்.
௭௦௯ சலவருள் - வஞ்சகருள்.
௭௧௦ எண்பதம்-காட்சிக்குளெளியனாயிருக்குந்தன்மை.
௭௧௨ திறை - கப்பம்.
௭௧௩ இளையா-பின்னிடாத.
௭௧௯ வினை - போர்.
௭௨௦ உளம் கொள - மனம் திருப்தியடைய.
௭௨௨ மெய் - உண்மை.
௭௨௩ செவிச்சொல் - பிறன் செவியிற் சொல்லுதல்.
,, அயல்நகை - பிறன்முகம் நோக்கி நகுதல்.
௭௨௫ அமையம் - சமையம்.
௭௨௬ விழைபவற்றை-விரும்புவனவற்றை.
௭௨௭ ஐயுறுவகை - சந்தேகியாதவாறு.
,, யாங்கணும்-எவ்விடத்தும்
௭௩௧ கூறு - பிரிவு.
௭௩௮ முதுவர் - அறிஞர்.
௭௪௦ சொல்-சொல்விவைத்த.
௭௪௪ நன்றுறல்-நன்மையடைதல்.
௭௪௭ உடன்படல் - ஒத்துக்கொள்ளுக.
௭௫௧ நாடுவ - விரும்பும் பொருள்கள்.
௭௫௨ மருவிய - பொருந்தியவை.
௭௫௪ உஞ்ஞெ - உணவு.
௭௫௯ அயல் - பக்கத்துள்ள.

அரும்பதவுரை.

எசுக அமைதல்-நிரம்பியிருத்தல்.
எசுஉ ஒக்க - சரியாக.
எசுசு உறு பசி - மிக்க பசி.
,, அரும்பிணி - நீங்காதபிணி.
,, செறுபகை-அழிவு செய்யும் பகைவர்.
எசுஎ சீர் - புகழ்.
எசுகூ தகை - பெருந்தன்மை.
எஎo மெய்யறிவு-கடவுள் ஞானம்
,, அமைந்து - நிரம்பி.
எஎஎ அருநிலம் - பகைவரைக் கொல்லும் கருவிகள் முதலியவற்றைக் கொண்டுள்ள நிலம்.
எஅஅ அகநெறி - நிலக்கீழ்வழி.
எகூo பொறி - கொல்கருவி.
எசுரு வலப்படை-வல்லமையுள்ள படை.
எகூடு கரவு - காட்சிக்குப் புலப்படாத படுகுழி முதலியன.
அகஎ நடை - ஒழுக்கம்.
அகஅ அலக்கண் - துன்பம்.
அககூ உழந்து - வருந்தி.
அஉo அழியாது - நீங்காது.
அஉக விளையுள் - விளைபொருள்.
அஉரு கிழவர் - உடையவர்.
அஉச காடு - அடர்ந்த செடி முதலியன.
அசரு மேம்பட - மேன்மையுற.
அடுக படுத்தல் - கொல்லுதல்.
அடுடு மெய்யியல் - கடவுட்டன்மை.
அடுஅ உழல்வர் - வருந்துவர்.
அடுகூ பிணக்குற்று - சண்டையிட்டு.
அஎரு பயப்பொருள் - பயன் தரும் பொருள்.
அஎடு எரி - தீ.
,, கூர் - கூர்மை.
அஅச மறத்தினர் - வீரத்தையுடையவர்.
அஅடு மா - யானை.
,, பரி - குதிரை.
அஅசு அறைப்படுத்து-நிலக்கீழ் வழி செய்து.
அஅஎ கலங்கள் - கப்பல்கள்.
அகூரு வேதனம் - சம்டளம்.
அகூச சீர்-பட்டம் முதலியன.
அகூச பரிசில் - வெகுமதி.
அகூஎ கூற்றையும்-எமனையும்.
,, ஆற்றல் - வல்லமை.
அகூஅ இழைத்தது-செய்தசபதம்.
,, இகவாது-தவறாது
கூoச இடித்துக்கூறல் - புத்தி கூறல்.
கூoடு புணர்ச்சி - சேர்க்கை.
,, பழகுதல்-இடை இடையே கூடல்.
,, உணர்ச்சி - ஒரே வித உணர்வு.
கூகக கிழமை - உரிமை.
கூககூ விழையார் - பகைவர்.
கஉo புதுமையில்- கண்டமாத்திரத்தில்.
கூஉக ஆகா - விலக்கவேண்டிய.
கூஉரு உறுவதே - தமக்கு வருவதையே.
,, தூக்கும்-ஆராயும்; நோக்கும்.
கூஉடு ஒல்லும்-செய்யமுடியும்.

கடுஉ உஞற்று - செய்யாத.
கருO நடர் - பொய்யர்.
கருஎ தட்பம்-குளிர்ச்சி-கருணை.
கருஅ தகல் - தகுதி.
கசரு அறைப - சொல்வர்.
கடுக அடல் - வெல்லுதல்.
கஅஅ மேய்வரர் - (அரியவற்றைக்) கவர்வார்.
கசுக மைந்து - வலி.
,, தலையழித்தல் - நெருங்கி யழித்தல்.
கஎடு மாண்டார்-மாட்சிமைப்பட் டார்.
கஎஅ தூங்காது - தாமதியாது.
ககூக கூகை - கோட்டான்.
ககூஅ கூம்பும் - அடங்கியிருக்கும்.
ககூகூ அடர்க்கும் - கொல்லஎழும்.
கOOஉ முதல்நிலம்-குறிஞ்சி.
கOOடு முரண் - வலி.
கOOஅ உறுபகை - பெரும்பகை வர்.
கOகக ஆற்ரு - நிக்ராகா.
கOகரு உயின் - பிழைப்பின்.
கOடுக முறை - நியாயம்.
கOருஉ அடுக்காது - கொல்லாது.
,, தலை - சிறந்தார்.
கOகரு அடி - மூலதனம்.
ககசுO தகுதி - நீதி.
ககசுச இந்தியம் - ஐம்பொறி.
ககசுசு [illegible] - புறங்கூறல்.
ககசுகூ பின்றைநாள் - பின்வரும் நாள்.
ககஎO உற்ற - துன்பமடைந்த.

கOஎக இறை-இறைப்பணம்.
,, இறை - அரசன்.
கOஎடு ஓம்பலை - காப்பை.
கOஅக கடிவது - களைவது.
கOஅகூ நவை - குற்றம்.
கOகூக அறுக்கும் - நீக்கும்.
கOகூரு ஆற்றுதல் - செய்தல்.
கOகூச துப்புரவு - உணவுமுத லியன.
கOகூகூ ஆறு அறிவினர் - ஐம் பொறி யறிவுகளையும் பகுத்தறிவையும் கொ ண்டுள்ள மனிதர்.
ககOரு அளிப்பவர் - இரட்சிப் பவர்.
ககOசு முகை - அரும்பு.
,, அனர் - போன்றவர்.
கககஉ போன்ம் - போலும்.
கககஎ உகுத்தவர் - சிந்தியவர்; விடுத்தவர்.
கககஅ ஊறு - துன்பம்.
ககஉரு காவினில்-மறைவில்.
ககருரு இயற்கு-தன்மைக்கு.
ககசஅ நிரயம் - நரகம்.
,, கழி - மிக.
ககடுகூ ஆடி - கண்ணாடி.
ககசுO அடுதல் - கொல்லுதல்.
ககஎO உறுத்தும் - வருத்தும்.
ககஎஅ சமன் - எமன்.
கஉOக கரி - சாக்ஷியம்.
கஉகக அடங்கிய-புலப்படாத.
கஉருஅ ஆணவம்-அகங்காரம்.
கஉடுO ஆற்றி - செய்து.

அரும்பதவுரை முற்றிற்று.